பக்கங்கள்:13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 23 வெள்ளிக்கிழமை 07.01.2022 கதிர் 63

### இனி இது ரகசியம் அல்ல!

பொது ஆவணத் தயாரிப்புத் தொடர்பான சர்ச்சை முடிவுக்கு வந்திருக்கின்றது. நல்ல விடயம். சர்ச்சையே ஏற்படாமல் இந்த விடயத்தை ஒப்பேற்றியிருக்க முடியும்என்பதுஎன்நிலைப்பாடு.

முதலில் கூட்டமைப்புக்குள் இந்த சர்ச்சை –

பக்கம்02

# இந்தியப் பிரதமர் மோடிக்கான ஆவணத்தில் தமிழ்த் தலைவர்கள் மாத்திரம் கையொப்பம்

## சம்பந்தன் தலைமையில் விரைவில் தூதுவரிடம் ஒப்படைப்பர்



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் ஒப்படைப்பதற்காகத் தமிழ்பேசும் தரப்புக்களின் பொது நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கும் ஆவணத்தில் வடக்கு, கிழக்கு தமிழர்களின் கட்சிகள் நேற்று ஒப்பமிட்டன.

கடந்த 21ஆம் திகதி இறுதி 10

# தமிழீழ வரைவு ஆவணமா மோடிக்குச் செல்கின்றது?

## இப்படிக் கேள்வி எழுப்புகின்றது அரசு

மலையக மற்றும் முஸ்லிம் கட்சிகளைத் தவிர்த்து வடக்கு, கிழக்கு தமிழ்க் கட்சிகள் மாத்திரம் கையொப்பமிட்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஆவணம் அனுப்பப்படுமாக இருந்தால் அது விடுதலைப்புலிகளின் கனவான தமிழீழத்துக்கான வரைவாகவே இருக்கும் என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் இந்நாள் கல்வி அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்தார். 10



### ஜனாதிபதி கோட்டாபயவின் கொள்கை விளக்க உரை மீது விவாதம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கை விளக்க உரை தொடர்பில் இரு நாள்கள் விவாதம் கோருவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கை விளக்க உரை எதிர்வரும் 18 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

அதன்பின்னர் அதுதொடர்பில் 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் விவாதம் நடத்த நேரம் ஒதுக்கப்பட வேண்டும் என சபாநாயகரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. தெரிவித்தார்.



## ராஜபக்ஷ அரசை விரைவில் அடித்து விரட்டுவர் மக்கள்!

### ராஜித எம்.பி. சூளுரை

நாட்டு மக்களை நடுவீதியில் கொண்டு வந்து விட்டுள்ளது ராஜபக்ஷ அரசு. இந்த அரசை மக்கள் விரைவில் அடித்து விரட்டுவர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். 10

## திருமலை எண்ணெய்க் குதங்கள் தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்து

### உறுதிப்படுத்தினார் கம்மன்பில

திருகோணமலை எண்ணெய்க் குதங்களை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தம் நேற்று மாலை கைச்சாத்திடப்பட்டுள்ளது என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தனது ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், குறித்த 10



## தாராளமாக உடனே வெளியேறலாம்; மைத்திரிக்கு மஹிந்தானந்த பதிலடி

அரசிலிருந்து வெளியேறுவதாக இருந்தால் தாராளமாக உடனே வெளியேறலாம் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குப் பதிலடி கொடுத்துள்ளார் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே.

சுசில் பிரேமஜயந்தவாக இருக்கட்டும், மைத்திரிபால சிறிசேனவாக இருக்கட்டும், அரசில் இருப்பதாக இருந்தால் அரசின் கொள்கைகளை ஏற்க வேண்டும். விமர்சனங்கள் இருந்தால் அரசுக்குள் அதனைச் சுட்டிக் காட்ட வேண்டும். 2



## யாழ்.விமான நிலையம் மூடல் மிகவும் கவலை அளிக்கின்றது

### முன்னாள் அமைச்சர் ரணதுங்க தெரிவிப்பு

(இ.கலையமுதன்)

பலாலி சர்வதேச விமான நிலையம் தற்போது மூடப்பட்டுள்ளமை மிகவும் கவலை அளிக்கின்றது என முன்னாள் போக்குவரத்து விமான சேவைகள் அமைச்சர் அர்ஜூன ரணதுங்க தெரிவித்தார். 10



## ஆரியகுளத்தில் மதத்தைத் திணிக்க முயன்றால் அது அஸ்தி கரைக்கும் தீர்த்தக் கரையாக மாறும்



### ஆளுநருக்கு சிவாஜி கடும் எச்சரிக்கை; ஜனாதிபதியின் எடுபிடி எனவும் சாடல்

(இ.கலையமுதன்)

ஆரியகுளத்தில் மதங்களைத் திணிக்க முற்படக்கூடாது. அவ்வாறு மதங்களைத் திணிக்க முற்பட்டால் அந்தக் குளத்தில் அந்தியேட்டி அஸ்தியைக் கரைக்கத் தமிழ் மக்கள் முற்படுவார்கள். வீணாக இதனைப் பிரச்சினையாக்க வேண்டாம்.

- இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகமுமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ். ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 10

### ஜீவனை விவாதத்துக்கு அழைக்கின்றார் சிவாஜி



(இ.கலையமுதன்)

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா மக்களின் வரிப்பணத்தில் பெருமளவு நிதியைச் செலவிடுகின்றார் 10

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிணக்கு – களையப்பட்டிருக்க வேண்டும். நடக்கவில்லை.

இந்தளவிலாவது தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகள் ஒன்றுபடுவது நல்ல சமிக்ஞைதான்.

ஆனாலும் தேர்தல் அரசியலுக்கு அப்பால் – கொள்கை, கோட்பாட்டியல் ரீதியாக கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் – இலங்கைத் தமிழரசு, புளொட், ரெலோ ஆகியவை – தங்களுக்குள் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வர வேண்டிய கட்டாயம் – அவசியம் – எழுந்திருப்பதை இந்த சர்ச்சை துலாம்பரமாகியிருக்கின்றது. இது கட்சித் தலைவர்களுக்குப் புரிந்ததோ தெரியவில்லை.

ஏதோ, ஒட்டுப்போட்ட சிலை மாதிரி ஓர் பொது ஆவணத்துக்கு இணக்கம் வந்து விட்டமையால் விவகாரம் தீர்ந்து விட்டது – கொள்கை உடன்பாடு வந்துவிட்டது – என்று கருதுவதற்கு இடமில்லை.

கொள்கைப் பரப்பில் கூட்டமைப்புக் கட்சிகள் இடையிலேயே பெரும் முரணிலை இருக்கின்றமையை இப்போதைய சர்ச்சையை நுணுகிப் பார்க்கின்றவர்கள் நுட்பமாக அறிய முடியும்.

ரெலோ எடுத்த முயற்சி, அதற்கு நல்ல பெயர் வந்து விடக் கூடாது, இது ஒரு ‘பிரிஸ்டீஜ்’ விவகாரம் என்று தமிழரசு பார்க்கின்றது என்பதற்கு அப்பால், இதற்குள் பெரிய கொள்கை முரண்பாடு இருப்பதும் கவனிக்கப்பட வேண்டும்.

13ஐ வலியுறுத்துவதில் அக்கறை காட்டமாட்டோம் என்று தமிழரசு பிடிவாதம் பிடிப்பதிலும் – எமக்கு அத்தகைய அக்கறைப் பிரச்சினை ஏதும் இல்லை என்று புளொட்டும், ரெலோவும் கோடி காட்டுவதிலும் –

மிகப் பெரிய கோட்பாட்டியல் முரண்பாடு உண்டு.

1987 இல் இலங்கை – இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்ட காலத்தில் இலங்கை மீது அழுத்தம் கொடுப்பதற்கு இந்தியாவிடம் இருந்த வலிமை வேறு. இப்போது இருக்கும் வலிமை வேறு. அது நலிவுற்று விட்டது.

13ஆவது திருத்தம் மூலம் கொண்டு வரப்பட்ட அதிகாரப் பகிர்வு வெறுமனே நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டவை.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்துக்கு உருவம் கொடுக்க எனக் கொண்டு வரப்பட்ட 13ஆவது திருத்தத்தின் அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகளை இந்தியா பார்த்திருக்கவே ஒவ்வொன்றாக விலக்கி, அதனை இன்று நீர்த்துப் போகச் செய்து விட்டது கொழும்பு. அவற்றைப் பார்த்திருப்பதைத் தவிர, வேறெதுவும் இந்தியாவால் முடியாது என்பதை அனுபவத்தில் பட்டறிவாக நாம் கண்டோம்.

இன்றைய நிலையில், பெரும் பொருளாதார நலிவில் சுருண்டு கிடக்கும் இலங்கை மீது, கடன் உதவித் திட்டங்களை வழங்குவதன் காரணமாக இந்தியாவுக்கு ஒரு தற்காலிக பிடிமானம் – Grip – வரும் என்பது உண்மைதான். அதன் மூலம் 13 இன் இயன்ற வரையான நடைமுறையாக்கத்துக்குக் கொழும்பு இன்று இணங்கினாலும், நாளை மறுதினம் அதை கொழும்பு கைவாங்காது என்பது என்ன நிச்சயம்?

தமிழர் தாயகத்துக்கு அதிகாரங்களைப் பகிர்வதற்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெறுவது சிக்கலாக இருந்தாலும், பகிரப்பட்ட அதிகாரத்தை மீளப் பறிப்பதற்கு பௌத்த, சிங்களப் பேரினவாதத்தை ஒன்று திரட்டி, நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவைப் பெறுவது சுலபத்திலும் சுலபம்.

ஆக, பதின்மூன்றாம் திருத்தம் அல்லது அதற்கு அப்பாலும் பகிர்வு என்ற பெயரில் – இந்திய அழுத்தத்தின் பெயரில் – இலங்கை எதை இன்று தந்தாலும், அதையே நாளை, கொழும்பு தட்டிப்பறித்து விட முடியும். அதுதான் சிங்களத்தின் பரவணிப் பண்பியல்பு என்பதை தமிழரசு நன்கு உணர்ந்தமையாலேயே இந்த 13ஆவது திருத்த நடைமுறையாக்கத்துக்குப் பின்னால் போக அது, பின்னடித்தது.

‘13 பிளஸ்’ என்ற தமிழரசு கருதுவது பகிரப்பட்ட அதிகாரங்கள் மீளப் பெறப்பட்டமாட்டா என்பது உறுதிப்படுத்தப்பட்ட ஓர் ஏற்பாட்டைத்தான். அதையே தமிழரசு கட்டிப் பிடித்து நிற்கின்றது. ரெலோவும் புளொட்டும் விட்டுக்கொடுத்து நிற்கின்றன. 13ஆவது திருத்தத்தின் முழு நடைமுறையாக்கம் என்ற அந்த இரு கட்சிகளினதும் அவசரத் தீர்மான முயற்சி அதனைத்தான் காட்டுகின்றது.

நல்ல காலம். அத்தகைய யோசனை அடக்கிய நகல் நிகராகரிக்கப்பட்டு, தமிழரசு தயாரித்த யோசனைத் திட்டம் ஒப்பத்துக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

ரெலோ, புளொட்டு மற்றும் கட்சிகள் ஆரம்பத்தில் தயாரித்த கடித வடிவத்தில் இருந்த சரித்திரப் பின்னணி தொடர்பான மூன்று பந்திகள் மாத்திரம் எடுக்கப்பட்டு, தமிழரசுக் கட்சி தயாரித்த நகலுடன் இணைக்கப்பட்டு இப்போது ஆவணம் இறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

இந்த ஆவணத்தில் புளொட், ரெலோ ஒப்பமிட்டாலும், மீளப் பறிக்க முடியாத அதிகாரப் பகிர்வே உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதில் தமிழரசுக்கும் ரெலோ மற்றும் புளொட்டுக்கும் கருத்தியல் ரீதியான – கோட்பாடு அடிப்படையிலான – முரணிலை இருப்பது பகிரங்கம்.

அந்த முரணிலையைக் களைந்து, தங்கள் நிலைப்பாட்டில் ஒன்றுபட்ட கொள்கை ரீதியான முடிவை எட்டாமல், கூட்டமைப்புக் கட்சிகள் மீண்டும் ஒன்றுபட்டு மக்களிடம் வாக்குக் கேட்க வருவது தமிழ் மக்களை முட்டாளாக்கும் செயலின்றி வேறில்லை.

★ ★ ★

நகைக் கடை உரிமையாளர் ஒருவரை நேற்று வழியில் கண்டேன். என்னை மறித்தார்.

“அப்ப. இனி யாழ்.ஸ்டான்லி வீதி நகரக் குளம், ஆரியகுளம், புல்லுக்குளம் எல்லாம் மழை வெள்ளத்தால் நிரப்பி வழிந்து, சிக்கல் வந்தால் யாழ்.மாநகர மேயரைத் திட்டாதீர்கள்... ஆளுநர் அலுவலகத்தில் போய் அவரிடம் நியாயம் கேளுங்கள்.” – என்று புறுபுறுத்தார்.

எனக்கு விளங்கவில்லை. ஏன் என்று கேட்டேன்.

“ஆரியகுளத்தைப் புனரமைக்கும் ஒழுங்கைச் செய்தது யாழ்.மாநகர சபை. மேயரின் அழைப்பை ஏற்று, திடுதிப்பென தன்னுடைய கண்டியன் நடன ஏற்பாட்டை நாக விகாரை விகாராதிபதியோடு சேர்ந்து செய்து கொண்டு போய் இறங்கி, திறந்து வைத்தார் ஆளுநர். இப்போது தன்னிஷ்டப்படி யாழ்.மாநகர சபை செயற்படாதமையால் ஆரியகுள உரிமை உங்களுக்குரியதா என்று கேள்வி கேட்டு, சண்டப் பிரசண்டம் பண்ணுகின்றார். உந்தக் குளம் எல்லாம் மாநகர சபை பராமரிப்பிலைதான் எனக்கு நினைவு தெரிஞ்ச நாளிலை இருந்துகிடக்கு. அதற்கு மாநகரசபையிட்டை உறுதி, ஆதாரம், வர்த்தமானி அறிவித்தல் என்று ஏதும் இருக்காது. அப்ப.. அது மாநகர சபையின்ரை இல்லை என்றால், இனி யாழ்.மாநகர சபையின்ர குளம் எல்லாம் ஆளுநர் பராமரிப்பு எண்டு சொல்லுங்கோ....” – என நியாயம் பிளந்தார் அவர்.

நான் நிலைமையை அவருக்குப் பக்குவமாக விளங்கப்படுத்தினேன்.

“யாழ்.மாவட்டத்திலை 1, 032 குளங்கள் இருக்கின்றன, மத்திய அரசு சட்டப்படி அவை எல்லாம் கமநல சேவைத் திணைக்களத்தின் கீழ் வர வேண்டியவை. ஆனால், விவசாயப் பாசனம் செய்யும் குளங்களை மட்டுமே நாங்கள் பராமரிப்போம். மிகுதியை அந்தந்தப் பகுதி உள்ளூராட்சி சபையே பார்த்துக் கொள்ளட்டும் என்று கமத்தொழில் திணைக்களம் விட்டுவிட்டது. இந்த ஏற்பாடு சட்ட ரீதியானது அல்ல. ஆனால் நடைமுறையில் அப்படித்தான் உள்ளது. யாழ்ப்பாணம் மாநகர சபையின் கீழ் இப்படி நாற்பது குளங்கள் உள்ளன. அவை எவற்றின் நீரும் – ஆரியகுளம் போல – பாசனத்துக்குப் பயன்படுத்தப்படுவதே இல்லை. அதனால் அவை மாநகர சபைக்குரியவை. அதிலும் மூன்று குளங்களுக்கு, உறுதி ஆவணப்படி தனியார் உரிமை கோரும் பிரச்சினைகளுமுண்டு. ஆனால் அந்தப் பிரச்சினை ஆரியகுளத்துக்கு இல்லை – ஆக, இப்போது ஆளுநர்தான் உரிமை கோருவார் போல” – என்றேன் நான். அவருக்குப் புரிந்ததோ, இல்லையோ தலையாட்டி விட்டுப் புறப்பட்டார்.

அரசமைப்பின்படி மத அனுட்டானங்களை தடுக்கும் அதிகாரம் யாழ்.மாநகர சபைக்குக் கிடையாது என்று அரசமைப்புக்கு புதுவியாக்கியானத்தோடு கதைவிட்டிருக்கின்றார் ஆளுநர். கேட்கச் சிரிப்பாக இருக்கின்றது. அந்த பிரதேசத்தில் அத்தகைய மத அனுட்டானம் ஏதும் முந்திப் பிந்தி நடந்ததல்ல. இப்போது புதிதாக வலிந்து திணிக்க முயல்கின்றார் ஆளுநர். அதுதான் உண்மை.

சபையின் முடிவை மீறி பலவந்தமாக அங்கு புதிதாக மத அனுஷ்டானங்களைத் திணிக்க முயல்வதுதான் அரசமைப்பை மீறும் அதிகாரத் துஷ்பிரயோகமாகும்.

ஆளுநரின் அதிகார வண்டி பிரேக் இல்லாமல் தறிகெட்டு – கண் மண் தெரியாமல் – ஓடுவதாகத் தெரிகின்றது. நீதிமன்றம்தான் பிரேக் பூட்ட வேண்டிய நிலைமை வரும் போல தோன்றுகின்றது. அதற்கான வழிப்படுத்தலில்தான் அவர் போக்கு முன்னேறுகின்றது.

நீதிமன்றத்தை அவர் எதிர்கொள்ள வேண்டிய வேறு சில விடயங்களுக்கும் அவர் பிள்ளையார் சுழி போட்டிருக்கின்றார் என்று தெரிகின்றது.

அவற்றின் விவரத்தை நாளை பார்ப்போம்.

– மின்னல் –

## தாராளமாக உடனே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதைவிடுத்து வெளியில் சென்று விமர்சிப்பது ஏற்புடைய நடவடிக்கை அல்ல.

இருக்க முடியுமென்றால் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அரசிலிருந்து உடனே வெளியேற வேண்டும் என்றும் மஹிந்தானந்த அளுத்கமகே கூறியுள்ளார்.

அத்துடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசிலிருந்து வெளியேறினால்கூட தமக்குப் பாதிப்பில்லை என்று மொட்டு கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்து வருகின்றனர்.

சாரதி தேவை
யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கொழும்பு சென்று வரக்ககூடிய கனரக வாகன சாரதி தேவை
தொடர்புகளுக்கு -
0770266833
0774449705






# இந்தியாவுடன் நானே பேச்சு நடத்தினேன்!



## கம்மன்பில இப்படிக் கருத்து

இந்தியாவுடன் இணைந்து திருகோணமலை எண்ணெய் களஞ்சிய நிலையத்தை அபிவிருத்தி செய்வது மற்றும் இந்தியாவிடம் இருந்து பெற்றுக்கொள்ளும் எரிபொருள் கடன் என்பவற்றுக்கான பேச்சை நானே முன்னெடுத்தேன். மாறாக நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவால் முன்னெடுக்கப்படவில்லை என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவிக்கின்றார்.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இந்தியாவுடன் முன்னெடுத்த பேச்சுகள் மூலமாக எரிபொருளுக்கான கடன் மற்றும் திருகோணமலை எண்ணெய் களஞ்சிய சாலை அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்ற நிலையில் அது தொடர்பாக வலுசக்தி அமைச்சரின் நிலைப்பாட்டைத் தெரிவிக்கும் போதே அவர் இவற்றைக் கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு -

இந்தியாவுடன் நிதி அமைச்சர் முன்னெடுத்த பேச்சுகள் மூலமாகவே எமக்கு எரிபொருள் நிவாரண கடன் மற்றும் திருகோணமலை எண்ணெய் குதங்கள் அபிவிருத்தி தொடர்பாகப் பேசப்பட்டதாக கூறுகின்றமை பொய்யான பிரசாரமாகும்.

ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் உணவு மற்றும் மருந்து இறக்குமதிக்கும், 50கோடி அமெரிக்க டொலர்கள் எரிபொருள் பெற்றுக்கொள்ளவும், 40 கோடி கைம்மாற்றல் கடனாக பெற்றுக்கொள்ளவும், நான்காவதாக எரிபொருள் களஞ்சிய நிலைய அபிவிருத்தி தொடர்பாகப் பேசுவதாகக் கூறப்படுகின்றது.

ஆனால், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் பேச்சின் போது 100 கோடி அமெரிக்க டொலர்களைப் பெற்றுக்கொள்ளும் பேச்சு மட்டுமே முன்னெடுக்கப்பட்டது. அதாவது உணவு மற்றும் மருந்து இறக்குமதிக்கான கடன் சலுகையையே அவர் பெற்றுக்கொண்டுள்ளார்.

எனினும் எமது நாட்டில் எரிபொருள் தேவைக்காகக் கடன் தருமாறு 2021 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 24 ஆம் திகதியே இந்திய உயர் ஸ்தானிகருக்குக் கடிதம் மூலம் அறிவித்தேன். அதேபோல் திருகோணமலை எண்ணெய் களஞ்சிய நிலைய அபிவிருத்தி குறித்த பேச்சு 2020 ஓகஸ்ட் 15 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்டது.

ஆகவே, இந்த இரண்டு செயற்பாடுகளையும் நானே முன்னெடுத்தேன். அதேபோல் 40கோடிக்கான கைம்மாற்று கடன் பெறுவது குறித்த பேச்சை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்றாலே ஆரம்பித்தார். எனினும் நிதியமைச்சர் இந்தியாவில் இவற்றை பேசியதால் நான்கு காரணிகளையும் அவர் முன்னெடுத்தார் என ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

திருகோணமலை எண்ணெய் குதங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பாக நிதி அமைச்சர் என்னிடம் எப்போதும் பேசியதில்லை. திருகோணமலை எண்ணெய் குதங்களை அபிவிருத்தி செய்வதற்கான பொறுப்பு முழுமையாக எனக்கே வழங்கப்பட்டுள்ளது. அதற்கமையவே இந்தியாவுடன் நான் பேச்சுகளை முன்னெடுத்து வருகின்றேன். - என்றார்.

# பொருளாதாரக் கொள்கைகள் கேந்திர நிலைமொன்று நிறுவல்!

## ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்பாடு

பொருளாதாரக் கொள்கைகள் கேந்திர நிலைமொன்றை ஐக்கிய மக்கள் சக்தி நிறுவியுள்ளது.

பொருளாதாரத்துறையில் நிபுணத்துவம் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹர்ஷ டி சில்வா, கபீர் ஹாசீம் மற்றும் எரான் விக்கிரமரத்ன ஆகியோரின் கண்காணிப்பின் கீழ் குறித்த கேந்திர நிலையம் இயங்கவுள்ளது.

நாடு கடும் பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ள நிலையில், நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை இந்தக் குழு முன்வைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# இறுதி கட்டத்தை எட்டியுள்ளது கொரோனா தடுப்பூசி அட்டையை கட்டாயமாக்கும் சட்டம்!

## பணிகள் பூர்த்தி என்கிறார் வைத்தியர் அசேல குணவர்தன

பொது இடங்களில் நடமாடுபவர்கள் கொரோனா தடுப்பூசி அட்டைகளை கட்டாயம் வைத்திருக்க வேண்டும் என்பது குறித்த சட்டத் தயாரிப்புப் பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்த விடயம் தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை பூஸ்டர் எனப்படும் செயலூக்கிதடுப்பூசியை அனைவரும் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியம் என அசேலகுணவர்தனவலியுறுத்தியுள்ளார்.

குறித்த தடுப்பூசியை செலுத்துவதன் ஊடாக பல்வேறுபட்ட நோய் அறிகுறிகள் ஏற்படுவதாக வெளியான தகவல் விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## ரெலோவின் காத்திரமான பங்களிப்பு

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழர் தரப்புகளின் பொது நிலைப்பாட்டை வலியுறுத்தும் ஆவணம் ஒன்றை – அல்லது கடிதம் ஒன்றை – தயாரிக்கும் முயற்சி பெரும் களேபரங்கள், இழுபறிகளுக்கு மத்தியில் சுமுகமான முடிவுக்கு வந்திருக்கின்றது.

தமிழ்த் தேசியப் பரப்பில் – தளத்தில் – உள்ள கட்சிகளின் தலைவர்கள், அந்த ஆவணத்தில் ஒப்பமிட மலையக, முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் பார்த்திருந்து, ஆசீர்வதித்து, மகிழ்ச்சி தெரிவிக்க விடயம் முடிவுக்கு வந்திருக்கின்றது.

மூன்று வெவ்வெறு விதமான அரசியல் அபிலாஷைகளைக் கொண்ட – எண்ணிக்கை ரீதியில் சிறுபான்மையினரான – மூன்று வெவ்வேறு மக்கள் குழுமத்தின் எதிர்பார்ப்புக்களை பொது நிலைப்பட்ட ஆவணம் ஒன்றிற்குள் அடக்குவது சாத்தியமேயற்றது என்பதைப் புரிந்து கொள்ளாமல் அதற்காக முயன்று முட்டுப் பட்டதுதான் மிச்சம்.

பொது ஆவணம் தயாரிப்பதில் வெற்றியீட்ட முடியவில்லையாயினும் ரெலோ தீவிர முயற்சி எடுத்து ஆரம்பித்த இந்த நடவடிக்கை சிறுபான்மைத் தரப்புகளின் அரசியலில் மிகக் காத்திரமான முன்நகர்வு ஒன்றை ஏற்படுத்தியிருக்கின்றது என்பதை அனைத்து விமர்சகர்களும் ஒப்புக்கொண்டேயாக வேண்டும்.

சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் கொடூர இனவாத அடக்குமுறையை – வெறித்தனமான போக்கை – இந்த நாட்டின் மூன்று சிறுபான்மையின மக்கள் குழுமங்களும் எதிர்கொண்டிருக்கும் மிக அபாயகரமான வேளை இது.

அரசியல் அதிகாரத்தைத் தக்க வைப்பதற்காக ஆட்சியாளர்கள் மீண்டும் பௌத்த, சிங்களப் பேரினவாத வெறியைத் தூண்டி விடும் பேராபத்துத் துலாம்பரமாகத் தோற்றுகின்றது.

வரப் போகின்ற நெருக்கடியை சிறுபான்மை இனங்கள் தனித்து எதிர்கொண்டு தாங்குவது என்பது இக்கட்டானதாக இருக்கும்.

இந்தச் சமயத்தில் பேராபத்தை எதிர்கொள்ளும் சிறுபான்மை இனங்கள் குறைந்த பட்சம் தங்களுக்குள் ஒன்றுபட்டு நிற்பது, பேரினவாதத்துக்கு எதிரான எதிர்வினையை ஓரளவுக்காவது பலப்படுத்தும் என்பது கண்கூடு.

இந்த மூன்று தரப்புகளும் – தமிழ்த் தேசியத் தளத்தில் உள்ள அரசியல் கட்சிகள், முஸ்லிம் மக்களின் அரசியல் கட்சிகள், மலையகத் தமிழ் மக்களின் அரசியல் தரப்புக்கள் ஆகிய முக்குழுமத்தினரும் – அரசியல் களநிலை யதார்த்தங்களைப் புரிந்த கொண்டு, ஒரு தளத்தில் கலந்துரையாடி, செயற்படக் கூடிய ஒரு புரிந்துணர்வுச் சூழ்நிலையை, ரெலோ பல்வேறு எதிர்ப்புகள், நெருக்கடிகள், விமர்சனங்களுக்கு மத்தியிலும் முன்னெடுத்த இந்த முயற்சி ஏற்படுத்தித் தந்திருக்கின்றது.

தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகள் தங்களது அபிலாஷைகளை ஒன்றுபட்டு வெளிப்படுத்துவது மட்டுமே இப்போதைய தொடர் கலந்துரையாடலின் பெறுபேறாக வந்திருந்தாலும் –

இவ்விடயத்தை ஒட்டி தமிழ்ப் பேசும் தரப்புகள் ஒரு மேசையில் இருந்து கலந்துரையாடும் பொறிமுறை தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உறுதியளித்திருக்கின்றமை நல்லதோர் சமிக்ஞையாகும்.

அந்தப் பொறிமுறையைத் தொடரும் பொறுப்பு தமிழ்ப் பேசும் தரப்பில் ஒன்றிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட வேண்டும். ஒன்றில் அதை ரெலோ தானே தொடர்வதாக அறிவிக்கலாம். அல்லது மனோ கணேசன் போன்ற ஒரு தலைவரிடம் ஒப்படைக்கலாம். அது குறித்தும் இந்தக் கட்டத்தில் சிந்திப்பது நல்லது.

# சுற்றுலாத்துறையின் வளர்ச்சி தீவகப் பகுதியில் அதிகரிப்பு!

### டக்ளஸ் பெருமிதம்



தீவக பகுதியில் வேலைவாய்ப்பு இன்றி காணப்படும் இளைஞர் யுவதிகளுக்களின் தொழில்முயற்சிக்கான வாழ்வாதாரத்தைப் பெற்றுக்கொடுக்க எதிர்காலத்தில் சுற்றுலாத் துறையின் வளர்ச்சி அதிகரிக்கப்பட்டுவதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்.தீவக வேலணை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மண்கும்பான் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட சுற்றுலாத்தளத்தின் கடற்பரப்பிலானசுற்றுலாபடகுகள்சேவையை ஆரம்பிக்கும் கட்டட நிர்மாணப் பகுதி நேற்று (வியாழக்கிழமை) திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாகக் கடற்றொழில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் அவர் கூறியவை வருமாறு-

கடற்பரப்பிலான துரித அபிவிருத்தி சேவையிலான பங்களிப்பை வழங்கத் தனியார் முதலீட்டாளர்கள் முன்வந்த நிலையில் இதற்கான நடவடிக்கை அரசாங்கத்தால் முன்னேடுக்கப்பட்டுள்ளது. அதற்காக மிகுந்த நன்றியைத் தெரிவித்துகொள்ளுகின்றேன். - என தெரிவித்தார்.

இதற்காக 26 மில்லியன் ரூபா செலவில் முதற்கட்டமான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் இலங்கை கப்பற்துறை கூட்டுத்தாபனத்தின் தலைவர் வீரமன்னன் ராஜவே, வடபிராந்திய கடற்றொழில் கட்டளைத் தளபதி அட்மிரல் பிரியந்த பெரேரா, யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப் திணைக்களப்பணிப்பாளர் ஜெ.சுதாகர், யாழ்.இந்திய உதவித் துணைத்தூதரகத்தின் பதவிநிலை அதிகாரி உள்ளிட்ட அதிகாரிகள் சுற்றுலாத்துறை அதிகாரிகள், அமைச்சின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# வருமானமீட்டுவதற்காக 262 வாகனங்களை விடுவிக்க தயாராகும் சுங்கத் திணைக்களம்

சட்ட திட்டங்களை மீறி, நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்பட்ட பின்னர், விடுவிக்கப்படாமல் உள்ள சுங்கத் திணைக்களத்தின் பொறுப்பில் உள்ள வாகனங்களை விடுவித்து, அதனூடாக இலாபம் ஈட்டுவது தொடர்பில் அந்தத் திணைக்களம் அவதானம் செலுத்தியுள்ளது.

அவ்வாறான வாகனங்களை, தண்டப்பணம் மற்றும் வரி ஆகியவற்றை அறவிட்ட பின்னர் விடுவிப்பதனூடாக வருமானம் ஈட்டுவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரால் ஜீ.வி. ரவிப் பிரிய தெரிவித்துள்ளார்.

அதன்படி, சுங்கத் திணைக்களத்தின் பொறுப்பில், சட்ட திட்டங்களை மீறி இறக்குமதி செய்யப்பட்ட 262 வாகனங்கள் உள்ளன எனவும், அவற்றை இம்மாதம் நிறைவுக்குள் தண்டப்பணம் மற்றும் வரி ஆகியவற்றை அறவிட்டுக்கொண்ட பின்னர் விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, வரவு - செலவுத் திட்டத்தை முன் வைத்து, இந்த வாகனங்களை விடுவிப்பதன் ஊடாக அரசாங்கத்துக்கு 400 கோடி ரூபா மேலதிக வருமானத்தை பெற்றுக்கொள்வது தொடர்பில் பிரேரித்திருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வெலிகடை கைதிகள் கொலை வழக்கு தீர்ப்பு 12 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

வெலிக்கடை கைதிகள் கொலை வழக்கின் தீர்ப்பை ஜனவரி 12 ஆம் திகதி வரை ஒத்திவைத்து கொழும்பு மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் உத்தரவிட்டுள்ளது.

கிஹான் குலதுங்க, பிரதீப் ஹெட்டியாராச்சி மற்றும் மஞ்சுள திலகரத்ன ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் நேற்று (வியாழக்கிழமை) தீர்ப்பை அறிவிக்கவிருந்தது.

குறித்த வழக்கு நேற்று அழைக்கப்பட்ட போது, தீர்ப்பை தயார் படுத்த முடியாத காரணத்தால், தீர்ப்பை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை ஒத்திவைப்பதாக மூவரடங்கிய நீதியரசர்கள் குழாமின் தலைமை நீதிபதி கிஹான் குலதுங்க அறிவித்தார்.

கடந்த 2012 நவம்பர் மாதம் 9 ஆம் திகதியன்று எஸ்.ரி.எவ். அதிகாரிகள் வெலிக்கடை சிறைச்சாலைக்குள் நுழைந்து, கைதிகள் வசம் இருந்த சட்ட விரோத மற்றும் தடை செய்யப்பட்ட பொருள்களைக் கைப்பற்றும் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இந்த நடவடிக்கையின் போது, கைதிகளினால் சிறைச்சாலையின் ஆயுதக் கிடங்கு உடைக்கப்பட்டு சிறைச்சாலையிலுள்ள துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டதை அடுத்து, மோதல் ஏற்பட்டதாகவும், மோதலை அடக்குவதற்காக இராணுவத்தின் மூன்று படைப்பிரிவுகள் சிறைக்குள் அனுப்பப்பட்டன எனவும் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோதலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையின் போது, இந்த வழக்கின் பிரதிவாதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட 8 கைதிகளைசிறைச்சாலையின்தொழிற்பேட்டை என அழைக்கப்படும் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டு கொலை செய்தமை, அதற்கு சதி செய்தமை மற்றும் சட்டவிரோதமாக மக்கள் கூட்டமாக இணைந்து செயற்பட்டமைஉள்ளிட்ட 33 குற்றச்சாட்டுக்களின் கீழ் சட்டமா அதிபரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# 2021 நவம்பரில் காணாமல்போன சிறுவர்கள் மீரிகம பகுதியில் மீட்பு

2021 ஆண்டு நவம்பர் மாதம் காணாமல் போன சிறுவர்கள் இருவரும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என மீரிகம பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொட்டதெனியாவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வத்தேமுல்ல, பாதுராகொட பகுதியை சேர்ந்த உறவுக்கார சகோதரர்கள் இருவர் காணாமல் போயுள்ளனர் எனக் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் முறைப்பாடு செய்யப்பட்டது.

10 மற்றும் 12 வயதுடைய சிறுவர்கள் இருவரே இவ்வாறு காணாமல் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இடைவிடாது பணம் அச்சடிக்கும் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ!

## மைத்திரி சாடல்



நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ, கம்பஹா மாவட்டம் பியகமவில் உள்ள நாணயத் தாள்களை அச்சிடும் தொழிற்சாலையில் இடைவிடாது பணத்தை அச்சிட்டு வருகிறார் என முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மாத்தளையில்நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாடு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கை ரூபா நாணயத் தாள்களைப் போதுமான அளவுக்கு அச்சிட முடிந்தாலும் அமெரிக்க டொலர்களை அப்படிஅச்சிடமுடியாது. இலங்கை பொருளாதார நெருக்கடியை அடிப்படையாகக் கொண்டு மேலும் பல நெருக்கடிகளைச் சந்தித்து வருகிறது.

தற்போதைய அரசாங்கத்திடம் சரியான முகாமைத்துவம் இல்லாததே இதற்கான பிரதானகாரணம். அரசாங்கம் எடுக்கும் அரசியல் தீர்மானங்களில் தவறிழைத்துள்ளது. அரச நிர்வாக முகாமைத்துவத்தில் தவறிழைத்துள்ளது. நாட்டின் பொருளாதார உற்பத்தியில் தவறிழைத்துள்ளது. சர்வதேச தொடர்புகள் சம்பந்தமான முகாமைத்துவதிலும் தவறியுள்ளது. இவை அனைத்தும் சீர்செய்யப்பட வேண்டியவை. பசளை நெருக்கடி, வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு பற்றித் தற்போது பேசுகின்றனர். மருந்தகங்களிலும் மருந்து இல்லை. பொருளாதாரப் பிரச்சினையையும் டொலர் நெருக்கடியையும் எப்படி தீர்ப்பது. பஸில் ராஜபக்ஷ பியமக தொழிற்சாலையில் இடைவிடாது பணத்தை அச்சிடுகிறார்.

நான் ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் அந்த தொழிற்சாலைக்கு விஜயம் செய்தேன். ரூபா நாணயத் தாள்களை போதுமான அளவுக்கு அச்சிட்டு வெளியிட முடியும். எப்படிடொலர் கிடைக்கும்.

உலகம் நாட்டை ஆட்சி செய்பவர்களின் பதவிகள் முகங்களை பார்த்து செயற்படுவதில்லை. அரசாங்கத்தை நடத்தும் கொள்கைகளைக் காட்டி நான் சர்வதேசத்தை வென்றேன். 19 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் காரணமாகவே உலகம் என்னுடன் இணைந் தது எனவும் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கை மத்திய வங்கி தற்போது அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது!

## எரான் விக்கிரமரத்ன சாடல்

இலங்கை மத்திய வங்கி அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ன குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டின் மத்திய வங்கியை அரசியல்மயப்படுத்துவது மோசமான செயல் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமைக்குத் தீர்வுகாண வேண்டுமாயின் மத்திய வங்கி சுயாதீனமாக இயங்குவதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென இதன்போது கோரியுள்ளார்.

நிதிக் கட்டமைப்பை ஸ்திரப்படுத்தவும், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தவும் மத்திய வங்கி சுயாதீனமாக இயங்க வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்கத்தால் அண்மையில் வழங்கப்பட்ட நிவாரணங்கள் நாட்டின் பணவீக்கத்தை மேலும் மேலும் அதிகரிக்கச் செய்யும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பிச்சை எடுக்கும் நிலைக்கு தள்ளிவிட்டு



பின்னர் சிறு நிவாரணங்கள் வழங்கப்படுகின்றது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொருள்களின் விலைகள் கட்டுப்படுத்தப்பட்டால் மட்டுமே அனைவருக்கும் நன்மைகள் கிடைக்கப் பெறும் எனவும் தெரிவித் துள்ளார். அரசாங்க ஊழியர்களுக்கு மட்டும் நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன எனவும், தனியார் துறை மற்றும் சுயதொழில்களில் ஈடுபட்டு வரும் 70 லட்சம் மக்களுக்கு எவ்வித நிவாரணங்களும் வழங்கப்படவில்லை என எரான் விக்ரமரட்ன குற்றம் சுமத்தியுள்ளார்.

# சமையல் எரிவாயு சிலிண்டர்களை பெற மட்டக்களப்பில் மக்கள் வரிசையில்!

சமையல் எரிவாயு சிலிண்டர்களைப் பெற்றுக்கொள்வதற்காக மட்டக்களப்பு காத்தான் குடியில் புதன்கிழமையும்) மக்கள் நீண்ட வரிசையில் காத்து நின்றமையைக் காணமுடிந்தது. மட்டக்களப்பு மாவட்டத்தில் சமையல் எரிவாயு (லீற்றோ) தட்டுப்பாடு காரணமாக பொது மக்கள் பலத்த சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

சமையல் எரிவாயு (காஸ்) சிலிண்டர் போத்தல்களுடன் மக்கள் சமையல் எரிவாயுவை பெற்றுக் கொள்வதற்காக நீண்ட வரிசையில் காத்து நின்றனர்.

லீற்றோ சமையல் எரிவாயு மட்டக்களப்பு மாவட்ட ஏக விநியோகஸ்தர்களான எஸ்.எஸ்.எம். சொல்கார் நிறுவனத்தினருக்கு புதன்கிழமை காலை கொழும்பிலிருந்து வந்த லீற்றோ சமையல் எரிவாயுவை காத்தான்குடி கடற்கரை வீதியோரமாக வைத்து பொது மக்களுக்கு விநியோகம் செய்தனர். இதன் போது பொது மக்கள் சமையல் எரிவாயு வெற்று சிலிண்டர்களுடன் அங்கு வருகை தந்து வரிசையில் நின்று பெற்றுச் சென்றதைக் காணக் கூடியதாக இருந்தது. சமையல் எரிவாயு தட்டுப்பாட்டால் மட்டக்களப்பு மாவட்டத்துக்குப் போதுமானளவு சமையல் எரிவாயு வராதமையால் இந்த நிலைமை காணப்படுகின்றது.

# மட்டு.மாவட்டத்தில் பாரிய கடல் கொந்தளிப்பு மீன்பிடிப்பு நடவடிக்கைகள் முற்றாகப் பாதிப்பு!

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக பாரியளவில் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் மீனவர்கள் யாரும் கடலுக்குச் செல்லவில்லை. இதன்காரணமாக மீன்பிடி நடவடிக்கைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன என மீனவர்கள் தெரிக்கின்றனர்.

களுதாவளை, களுவாஞ்சிகுடி, தேத்தாதீவு புதிய காத்தான்குடி ஏத்துக்கால் பூநொச்சிமுனை நாவலடி புன்னக்குடா உட்பட பல கரையோர பிரதேசங்களில் கடல் கொந்தளிப்பால் மீனவர்கள் வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.

மீன்பிடி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதால் கடற்றொழிலாளர்கள் தமது படகுகள் உட்பட மீன்பிடி உபகரணங்களை கரையிலிருந்து தூர இடங்களில் நிறுத்தியுள்ளனர். மீன் விற்பனை நிலையங்கள் மீன் வாடிகள் என்பனவும் மூடப்பட்டுள்ளன.

# போதைப்பொருள் கடத்தல்காரரிடம் கைப்பற்றப்பட்ட ஒரு கோடி ரூபா!

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் இரண்டு பேரை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைதுசெய்துள்ளனர்.

இதன்போது ஒரு கோடியே 40 லட்சம் ரூபா ரொக்கப்பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

முன்னதாக தங்காலை, கொஸ்கோரடுவ, சீனிமோதர பிரதேசத்தில் வசிக்கும் 32 வயதுடைய ஒருவரை அதிரடிப்படையினர் கைது செய்தர்.

இதன்போது அவரிடம் இருந்து 50 லட்சம் ரூபா ரொக்கம் மற்றும் 377 கிராம் தங்க நகைகள் கைப்பற்றப்பட்டன.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது கடத்தலுக்குப் பயன்படுத்தப்படும் மீன்பிடிக் கப்பலின் மூலம் போதைப் பொருள் கடத்தல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை தெரிய வந்துள்ளது.

அத்துடன் போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் தேடப்பட்டு வந்த பிரதான சந்தேக நபர், பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றமை தெரியவந்தது.

இந்தநிலையில் அவரது வீட்டில் நடத்தப்பட்ட சோதனையின் போது, அவரின் தந்தையார் கைதுசெய்யப்பட்டார்.

குறித்த வீட்டில் இருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கி மற்றும் 2 மகசின்கள், 90 லட்சம் ரூபா பணம் என்பன கைப்பற்றப்பட்டன.

# நாட்டின் கடன் சுமையில் பாதியை திருட்டைநிறுத்தினால் அடைக்கலாம்!

## ஜே.வி.பி. சுட்டிக்காட்டு

நாட்டில் நிலவும் ஊழல் மற்றும் முறைகேடுகளைத் தடுத்து நிறுத்தினால் தற்போதுள்ள கடன் சுமையில் பாதியை அடைக்க முடியும் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

தனியார்வானொலி நிகழ்ச்சி யொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தவகையில் திருட்டு மற்றும் மோசடிகளைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதே எங்களது முதல் நோக்கமாக இருக்கு மெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அரசியல் வாதிகளுக்கு எதிராக மட்டுமன்றி ஊழல் மற்றும் முறைகேடுகளுக்குத் துணை போகும் அதிகாரிகளுக்கு எதிராகவும் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டுமெனவும் விஜித ஹேரத் வலியுறுத்தியுள்ளார்.

# நாட்டில் சுற்றுலாப் பயணிகள் ஊடான ஒமிக்ரோன் பரவலைத் தடுக்க முடிவு!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அறிவிப்பு



சுற்றுலாப் பயணிகளின் ஊடாக நாட்டுக்குள் ஒமிக்ரோன் திரிவு பரவுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மிகவும் வேகமாக பரவக்கூடிய ஒமிக்ரோன் திரிவு, சுற்றுலாப் பயணிகள் ஊடாக பரவுவதைத் தடுக்க கடுமையான நடவடிக்கைகள் எதிர்வரும் நாள்களில் முன்னெடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுகாதார அமைச்சால் வழங்கப்படும் எந்தவொரு பரிந்துரைகளையும் ஏற்றுக்கொண்டு அதன் அடிப்படையில் செயற்படுவதற்குத் தயார் என அவர் தெரிவித்துள்ளார்.

சுற்றுலாப்பயணிகள்நாட்டுக்குள்பிரவேசிக்கும் போதே அவர்கள் தடுப்பூசி ஏற்றிக் கொண்டுள்ளனரா? அவர்களின் ஏனைய விவரங்கள், நாட்டுக்குள் எந்த இடங்களுக்கு செல்கின்றார்கள் போன்ற சகல விவரங்களும் திரட்டிக் கொள்ளப்படுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுற்றுலாப் பயணிகள் குறித்த சுகாதார வழிகாட்டல்களில் எவ்வித தளர்வும் ஏற்படுத்தப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுகாதார அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கு அமைய சகல சுகாதார வழிகாட்டல்களும் பின்பற்றப்படுகின்றன என்பதைத் தம்மால் உறுதிப்படுத்த முடியும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 244

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**626.இவையெல்லாம் இனப்படு கொலை என்ற ஆராய்வினை பாதிக் குமா?**

தமிழ் மக்கள் தங்களுக்கு நடந்த அட்டூழியங்கள், அவற்றின் வலிகளில் நம்பிக்கை வைத்து இனப்படுகொலை என நிறுவப்பட வேண்டும் என்று கூக் குரலிடுகிறார்கள். ஆனால் வல்லரசுகள், ஸ்ரீலங்கா அரசு, எதிர்த் தரப்புகள் மனித உரிமை சபையில் வைக்கக்கூடிய நியா யங்களையும், சாட்சியங்களையும் கூட கணக்கெடுக்க வேண்டும். அவை எல் லாவற்றினதும் பிரதான கருத்துப் பொருளோ, இவையெல்லாம் ஒரு பயங் கரவாத இயக்கம் அழிக்கப்படுவதின் பக்க விளைவுகள், இனப்படுகொலைக் கான எண்ணப்பாங்கு இருக்கவில்லை என்பதாகும். முள்ளிவாய்க்கால் தோன்று முன்னரேயே, 'உதயம்' பத்திரிகையில் ஆண்டுக்கணக்காக வந்த அபிப்பிராயங் கள், அதேபோன்று 1977இல் இருந்து 'Tamil Times', 'Colombo Telegraph' போன்றவற்றில் ஆக்கப்பட்ட நியாயங்கள், 'Saturday Review' ஆசிரியராக இருந்து, பின் விடுதலை புலிகளுக்கு ஆதரவாக 'Hot Spring'ஐ லண்டனில் இருந்து நடத்தி, கருத்து வேற்றுமைகளால் துரத்தி யடிக்கப்பட்ட ஆசிரியர் சிவநாயகம் பின் னாளில் எழுதிய புத்தகத்தின் கருத்துக்கள் எல்லாம் இந்த ஆராய்வுகளின் நோக்கங் களுக்காக ஆதாரங்களாக பார்க்கப்படும். அவை அரசாங்கத்தின் அட்டூழியங்க ளையும் சுட்டிகாட்டும். ஆனால் பெருச்சா ளிகள் தங்கள் இருப்புக்கும் வளர்ப்புக் கும் விடுதலை போராட்டத்தை பற்றி எழுதிலும் வாக்கு மூலங்களிலும் கொடுத்த சாட்சியங்கள் முத்திரைகள் அடிப்பதற்கு பாவிக்கப்படும்.

யாரை நோவது?

**627.தாய்மையை ஒட்டி ஒரு சினிமா எடுக்கப்பட்டதாக ஞாபகம்?**

த ரெரறிஸ்ட் (The Terrorist) என்ற வெளிவந்த படம் பலமான வரவேற்புகளை சர்வதேசத்தில் பெற்றது. ராஜீவ் காந்தி யின் தற்கொலைக் குண்டுதாரியின் மன நிலையிலிருந்து அதன் முன் ஏற்பாடு களை பற்றியவற்றை கருவாக கொண்டது அது, தற்கொலை குண்டுதாரியாக இணங்கி எல்லா நடவடிக்கைகளிலும் ஒத்துழைத்தாலும் தற்கொலையை நடத் துவதற்கான சில தினங்களுக்கு முன் தான் தாய்மை அடைந்திருப்பதை அவள் உணர்கிறாள். அதிலிருந்து அந்த தாய்மை அவளை ஆள்கொண்டு, அதனால் கடைசி நேரத்தில் தாக்குதலை நடத்தாமல் கைவிட்டு, அவற்றை ஒழுங்கு பண்ணிய வர்களுக்கு ஏமாற்றம் தருகிறாள்.

ஒருவர் எந்தச் சிந்தனையில் ஒன்றை ஏற்படுத்தி நியாயப்படுத்தினாலும், மற் றவர்கள் அதை எப்படி பார்க்கிறார்கள், புரிந்து கொள்கிறார்கள் என்பதும் முக்கிய மானது. அப்படியான ஓரிரண்டு அனுப வங்கள் எனக்கும் 1979இல் இங்கிலாந்தில் இருந்த போது ஏற்பட்டன. பிரபாகரனுக்கு சோழ மன்னர்களின் வீர தீரங்களை, அவர்களது கடற்படைகளின் வெற்றிகள் குறித்தும் அறிவுறுத்தியவர் முன்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் நெருக் கமாகப் பணியாற்றி பின், தமிழ் நாட்டில் புகலிடம் பெற்ற ராஜரட்ணம். இவர் மூலம் தான் பிரபாகரன் சென்னையில் வடிவ மைப்பு ஓவியரை சந்தித்து அவர் மூலம் தீரத்தை வெளிப்படுத்தும் புலியின் முகத் துடன் குறுக்கேயிருக்கும் துப்பாக்கிகளு டன் விடுதலை புலிகளின் சின்னத்தை வடிவமைத்திருந்தார். அப்பொழுது உமா மகேஸ்வரன் இயக்கத்தின் தலைவராக, அவர்களது மத்திய குழுக் கூட்டத்தில் அந் தச் சின்னம் முழுமையாக ஏற்கப்பட்டி ருந்தது. பிரபாகரனுக்கு அந்த சின்னத்தி லும், வடிவமைக்கப்பட்ட அவர்களின் புலிக்கொடியிலும் அலாதி பிடிப்பும் மரியா தையும் இருந்தது. தனது புனைபெயரைக் கூட கரிகாலன் என மாற்றி அந்த பெயரி லேயே தன்னை அறிமுகமும் பலரிடம் செய்தார்.

தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் (TRRO) பணிகளுக்காக நான் இங்கிலாந்து புறப்படும் முன் பிரபாகரன், உமாமகேஸ் வரன் இருவரும் என்னை கொழும்பில் சந்தித்து, சின்னத்தையும் காட்டி, அதுதான் இனி பாவிக்கப்படும் என்பதையும், இங்கி லாந்தில் பரப்புரை செய்யும்படியும் கேட்ட னர். புதிய தமிழ் புலிகள் என்ற பெயரில் இருந்து, தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பெயர் மாற்றம் கொண்டிருந்த கால கட்டம். சோழனுடைய சின்னம் தமிழ் மக்களோடு ஐக்கியபட்டதால் எனக்கு அதில் ஆதங்கம் எதுவும் இருக்கவில்லை.

விடுதலையை முன்னெடுக்கும் போரா ளிகளாக இவர்களை முன்னிலைப்படுத்தி, ஐரோப்பாவில் இயங்கிய பல நிதி நிறுவ னங்களோடும் அரசியல் அமைப்புக்க ளோடும் பேசிய போது அவர்களில் அநே கர் ஏன் இந்தப் பெயரை பயன்படுத்துகிறார் கள், மேலைத் தேயங்களில் புலிகள் தீரம் மிக்க விலங்குகள் என்பதிலும் பார்க்க கரவும் கொடூரமும் கொண்டவையாக பார்க்கப்படுகின்றன எனக் கூறினார்கள். வேறு ஒரு பெயரில் அவர்களை ஏற்றுக் கொள்வது சுலபமாயிருக்கும் என்றார்கள். அதனைப் பற்றி அப்பொழுது எரித்திரிய விடுதலை முன்னனியின் (Eritrean Liberation Front) ஐரோப்பா தொடர்பாளர் மேரி டயன்ஸ் (Mary Dines) உடன் பேசிக்கொண்டிருந்த போது, அவர் சோழ னின் சின்னம் என்ற சரித்திர நியாயங் களை ஏற்று கொண்டாலும், மிருகங்க ளுக்கிடையே புலிகள் ஒன்றுதான் உண வுத் தேவைக்கு மேல் காரண காரியமில் லாமல் மற்றவற்றை வேட்டையாடுகின் றன, சிங்கம் கூட தனக்கும் தனது குடும் பத்துக்கும் தேவையான உணவை மட் டுமே வேட்டையாடுகின்றது, அதற்கு மேல் வந்தாலும் நாளைக்கு வைத்துக் கொள்ளலாம் என்று கொல்வதில்லை. புலி கள் அப்படியல்ல. இவர்கள் அப்படியான வர்கள் என்ற அபிப்பிராயத்தைத் தான் மேற்கு உலகத்துக்கு தருவார்கள், ஆகவே அதனை - அந்த அபிப்பிராயம் ஊறிவிடு முன் - மாற்றி விடுங்கள் என புத்தி சொன்னார்கள்.

**628.அந்தப் புத்திமதிகள் தெரி யப்படுத்தப்பட்டனவா?**

புறப்படும் சமயத்தில் ஒன்றாக சந் தித்த இருவரும், நான் திரும்பி வருவதற்கு முன்னரே கருத்து வேற்றுமைகளால் பிரிந்து, பாண்டிபஜாரில் சுட்டும் கொண் டார்கள். அவர்கள் பிரச்சினைகளில் புலிச் சின்னத்தையோ பெயரையோ கொடி யையோ யாரும் பிரபாகரனது குழுவை தவிர்ந்த எவரும் உரிமை கொண்டாடக் கூடாது என்ற நிர்ப்பந்தம் இருந்தது. அதை விட இயக்கத்திலிருந்து வெளியேறும் எவரும் புது இயக்கத்தை தொடங்கினால் அது மரண தண்டனைக்குரிய குற்றம் என்ற கோட்பாடும் இருந்தது. பின்னர் தமிழக அரசியல் ஈடுபாட்டாளர்களால் உமாமகேஸ்வரன் வேறாக இயங்கு வதற்கு ஒத்துக் கொள்ளப்பட்டாலும், பெயர், கொடி என்பவற்றில் எந்த அதிகார மும் தரப்படவில்லை.

பிரபாகரனோடு இந்தக் கருத்துக்கள் பேசப்பட்ட போதும், அவர் அதில் நாட்டம் கொள்ளவில்லை. அந்தப் பெயரும் சின்ன மும் போராளிகள் மத்தியில் ஊறிவிட் டதால் அதனையே தொடர போவதாக அறிவித்தார்.

புலிகள் என்ற பெயரையே பாவிக்க முடியாத நிலை உமாமகேஸ்வரனுக்கு. அது முக்கிய காரணமாக இருந்தாலும் சேரனதோ, பாண்டியனதோ இலச்சினை களுக்குப் போகாமல், மக்களை மையப் படுத்தி தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (Peoples Liberation of Tamil Eelam-PLOTE) என்ற பெயர் தேர்ந்தெடுக் கப்பட்டது. போரின் கடைசி காலப்பகுதி களில் வெளிநாடுகளில் மக்கள் ஆர்ப்பாட் டங்கள் செய்த போது விடுதலை புலிகளின் கொடிகளோடு செய்வதா அல்லது அதை விட்டு மக்களுக்கு நடக்கும் அட்டூழி யங்களை முன்னிலைப்படுத்துவதா என் பவை கேள்விக்குறிகளாகின. ஆயினும் விடுதலைப் புலிகளின் தலைமைகளிலி




ருந்த வேறுபாடுகளால் அவர்களின் கொடி களும் இருந்தன. அவற்றால் வரக்கூடிய தாக்கங்கள் பேசப்பட்டாலும் அவ்விடயங் கள் பின் தள்ளப்பட்டன.

போருக்குப் பின் அது அவர்கள் நடத் திய போராட்டத்தின் எழுச்சியை குறிக்கிறது. ஐ.நா முன் கவனவீர்ப்புப் போராட்டங்க ளில் ஈடுபடும் அவர்களின் ஆதரவாளர் கள், மிக அண்மையில் ஜனாதிபதி கோட் டாபயவுக்கு எதிரான கிளாஸ்கோ போராட்டங்களில் புலிகொடி முன்னிலை வகித்தது.

ஐ.நாவின் மத்தியில் பிரபாகரன் விட் டுச்சென்ற தமிழ் தேசியத்தை சம்பந்தன் இன்று முன்னெடுத்து செல்வாரா என்பது கேள்விக்குறியாக, இந்தக் கொடியை அவர் மதிக்கவோ பிடிக்கவோ எதிர்பார்க் கவும் முடியாது. அங்கு தான் தமிழ் தேசி யத்தின் பிழவுகளும் புரையேறுகின்றன. கட்சி, தேர்தல் அரசியல்கள் என்பன முன் வரிசைக்கு வருகின்றன. இலங்கைத் தமிழர்களின் பாரம்பரிய கொடியாக திகழ்ந்தது நந்திக்கொடி. 2 பெப்ரவரி 1621 கரையோரத் தளபதி வர்ணகுலத்தான் போர்த்துக்கேயருடனான போரில் களப்பலி ஆக, அவர்களின் தளபதி ஒலிவேரோவால் நந்திக்கொடி தரை இறக்கப்பட்டது. பின் னர் 3 செப்ரெம்பர் 1949இல் தந்தை செல்வா நல்லூரில் சங்கிலியன் தோப்பில் மீளவும் அதனை ஏற்றிவைத்தார்.

ஆயினும் எழுபதுகளின் பின் காலங் களிலிருந்து விடுதலை புலிகளின் அரசி யல் நோக்குகளோடு, தமிழ் மக்களின் விடுதலையோடு அவர்களது கொடியும் ஐக்கியப் படுத்தப்பட்டது. 18 மே 2009இல் நந்தி கடலோரத்தில் இவை எல்லாமே இனப்படுகொலையுடன் சின்னாபின்ன மாக்கப்பட்டன.

"வேள்வியில் வீழ்வ தெல்லாம்
வீரமும் புகழும் மிக்கு
மீள்வதுண்டு டுலகிற் கென்றே
வேதங்கள் விதிக்கும் என்பர்"

என்பது பாரதியாரின் தத்துவ வாசகம். களப்பலியான தலைவர்களும் போர் மறவர்களும் இனப்படுகொலைக்கு ஆளான ஒரு லட்சத்திற்கு மேலான பொது மக்களின் தியாகங்களும் விழலுக்கு இறைத்த நீராகாது, அது என்றோ வழி கோலும் என்று நம்பி பயணிக்கும் மக்க ளும் தேசியத்துக்கு உண்டு. அது தோற் றுப்போனது என உதறிவிடாமல், அது தந்த இலட்சியங்களையாவது - அதன் உணர்ச்சிகளையாவது - அணைத்துப் போவதுதான் அரசியலில் ராஜதந்திரம்.

(வளரும்)



# எண்ணெய் குதங்களை இந்தியாவிற்கு வழங்கியமைக்கு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்!




திருகோணமலை சீனக்குடா எண்ணெய் குதங்களை இந்தியாவிற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது

திருகோணமலை பிரதான பஸ் நிலையத்துக்கு முன்னால் கடந்த புதன்கிழமை கிழக்கு மக்களின் குரல் அமைப்பால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் நாட்டை விற்காதே, அரசாங்கமே தேசத்தின் சொத்துக்களை விற்றுத் தின்னாதே, டொலர் இல்லையென்றால் எண்ணெய்க் குத்தங்கள் மூலம் நாட்டுக்கு வருமானத்தை அதிகரி மற்றும் தேசிய சொத்துக்களைக் கூறுபோடாதே போன்ற சுலோகங்களை ஏந்தியவாறு தமது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர்.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த கிழக்கு மக்கள் குரல் அமைப்பாளரும், மக்கள் விடுதலை முன்னணியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளருமான சட்டத்தரணி அருன் ஹேமச்சந்திரா மேலும் அவர் கூறியவை வருமாறு -

திருகோணமலை சீனக்குடா எண்ணெய் குதங்களை இந்திய நிறுவனத்துக்கு விற்கப்படும் என எரிபொருள் எரிசக்தி அமைச்சர் கூட ஏற்றுக்கொண்டுள்ளார். உண்மையிலேயே இந்த நாட்டின் விலைமதிக்க முடியாத சொத்துக்களான இந்த எண்ணெய்த் தாங்கிகளை விற்பது என்ற விடயத்தை ஒருபோதும் நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் எனவும், இந்த மண்ணிற்குக் கடமைப்பட்டுள்ள அனைவரும் இந்த விற்பனைக்கு எதிராக அணி திரள வேண்டும் என்ற கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம். எந்தவொரு மதிப்பீடும் செய்யாமல் விலை மதிப்பற்ற இந்தச் சொத்துக்களை விற்க முன்வருகின்றமை நிச்சயமாகக் கண்டிக்கத்தக்க விடயமாகும்.

அதாவது இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரை தங்கள் நாட்டின் எந்த தேசிய சொத்துக்களையும் விற்கப் போவதில்லை. அது மாத்திரமல்லாமல் கடந்த அரசாங்கத்தில் விற்கப்பட்ட சொத்துக்களை மீளப் பெற்றுக் கொண்டிருப்பதாகவும் கூறி மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்று இருந்தார்கள்.

இந்நிலையில், கடந்த 2003 ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் காலத்தில் குறிப்பாக சந்திரிகா பண்டார நாயக்க ஆட்சிக் காலத்தில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் காலாவதியான நிலையில் மீண்டும் 50 வருட காலங்களுக்கு இந்திய நிறுவனம் ஒன்றுக்குக் குத்தகைக்கு வழங்கப்படுவது எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாத விடயம் எனவும் தெரிவித்த அருண் ஹேமச்சந்திர, குறிப்பாக நாட்டில் நிலவுகின்ற டொலர் பற்றாக்குறைக்கு இவ்வாறு குத்தகைக்கு வழங்கப்படுகின்ற குதங்களைச் சரிவரப் புனரமைத்து இந்த எண்ணெய் டாங்கிகள் ஊடாக இலங்கையின் வர்த்தகத்தை அதிகரித்து பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும்.

உலக வரைபடத்தில் மிகவும் முக்கியமான வர்த்தகத்துக்திற்கான கடல் வழிப் பாதையாகத் திருகோணமலை காணப்படுகின்றது. மேலும் திருகோணமலையில் இருப்பிடமான பல உலக வல்லரசு நாடுகளின் பார்வையில் இருக்கின்ற கேந்திரம் மிக்க ஓர் இடமாகக் கருதப்படுகின்ற திருகோணமலை பிரதேசத்தின் இந்த எண்ணெய்க்குத் தங்களை இந்தியாவிற்கு விற்பனை செய்வது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் எனவும் கிழக்கு மக்கள் குரலில் அமைப்பாளர் அருள் ஹேமச்சந்திரா தெரிவித்தார்.


எனவே, நாம் ஏனைய நாடுகளின் பகடைக் காய்களாக இருக்கக் கூடாது எனவும் எமக்குத் தேவையான சரியான திட்டங்களை நாங்கள் வகுத்துக்கொள்ள வேண்டும் எனவும் அவ்வாறே இந்த எண்ணெய்த் தாங்கிகளைச்சீர்செய்திருந்தால்நாட்டின்பொருளாதாரப் பிரச்சினைக்குப் பெரும் பங்கு வகிக்கும் எனவும் இதன்போது தெரிவித்தார்.

இவ்வாறு இந்தியாவிற்கு வழங்கப்படவுள்ள எண்ணைக் குத்தங்கள் தொடர்பில் அதற்கு எதிராக இரண்டு வழக்குகள் நிலுவையில் இருக்கும் நிலையில் இவ்வாறன செயற்பாடுகள் கண்டிக்கத்தக்கரவ. அதுமாத்திரமல்ல, இந்த நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு மோசமான சூழ்நிலை ஏற்படுத்த இந்த அரசாங்கம் பாடுபடுவதாகவும் சீனாவிற்கு கொழும்புத் துறைமுகத்தை வழங்கியதற்குப் பதிலாக இந்தியாவைத் திருப்திப்படுத்த நாட்டின் தேசிய சொத்துக்களைத் தாரைவார்க்க வேண்டாம் எனவும் இதன்போது கிழக்கு மக்கள் குரல் அமைப்பாளரும் மக்கள் விடுதலை முன்னணியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளருமான சட்டத்தரணி அருன் ஹேமச்சந்திரா தெரிவித்தார்.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் 100 இற்கும் மேற்றப்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டதுடன் இதற்கான சரியான தீர்வை இந்த அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. ஏன்றால் நாடளாவிய ரீதியில் பாரிய போராட்டங்கள் இடம்பெறும் எனவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# டீல் அரசியலிலான ஊழலை இல்லாதொழிக்க முடியாது!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் காட்டம்



டீல் அரசியலில் ஊழலை எதிர்த்துப் போராடுவது கடினம் எனவும், டீல் அரசியலை கையாளாமல் விட்டாலே அதனை இல்லாதொழிக்க முடியும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி என்பது நட்பு, அறிந்தவர், உறவினர் என்ற அடிப்படையில் உருவான அரசியல் இயக்கம் அல்ல என்று தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், ஊழலை ஒழிப்பதே தனது நோக்கமும், ஒரே கொள்கையும் ஆகும் எனவும் தெரிவித்தார்.

எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் முற்போக்கு எண்ணக்கருவாக அமைந்த, அதி நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய திறமையான இளம் தலைமுறையை உருவாக்கும் நோக்கில், டிஜிற்றல் கணினித் திரைகள் மற்றும் கணனி உபகரணங்களை வழங்கும் முன்னோடித் திட்டமான 'பிரபஞ்சம்'திட்டத்தின் ஐந்தாவது கட்டம் ஆரம்பமானது.

எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் முற்போக்கு எண்ணக்கருவாக அமைந்த நவீன உலகில் வளமான டிஜற்றல் எதிர்காலத்துக்காக இந்நாட்டின் இளைய தலைமுறையை, தொழில்நுட்பத்தில் தேர்ச்சி பெற்ற, ஸ்மார்ட் கணனி பயன்பாட்டில் தேர்ச்சி பெற்ற சமூகமாகக் கட்டியெழுப்பும் 'பிரபஞ்சம்' முன்னோடித் திட்டத்தின் ஐந்தாவது கட்டத்தில், ஏழு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா மதிப்பிலான வகுப்பறைகளுக்கான டிஜற்றல் கணினித் திரைகள் மற்றும் கணினி உபகரணங்களை கந்தளாய் வான்எல மகா வித்தியாலயத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கடந்த புதன்கிழமை வழங்கி வைத்தார். இந்த நிகழ்வில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் எண்ணக்கருவாக அமைந்து செயற்படும் 'பிரபஞ்சம்' நிகழ்ச்சித் திட்டம் நாட்டின் பின்தங்கிய பாடசாலைக் கல்வி முறையில் கல்வி கற்கும் பிள்ளைகளின் நவீன தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரபல அரசியல் சிந்தனையாளர் ஆக்டன் சாமி கூறியமை போல, 'எல்லையற்ற அதிகாரம் வரம்பற்ற ஊழலுக்கு வழிவகுக்கிறது' என்பது உண்மையே. ஊழலுக்கு எதிரான போராட்டத்தை வழிநடத்துவதே ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கிய கருப்பொருளாகும். ஊழல், அரச கொள்ளை, மோசடி இருக்கும் நாடுகள் முன்னேறுவதில்லை. நம் நாட்டுக்கும் இன்று அதே கதியே நேர்ந்துள்ளது. அத்தகைய நாட்டால் முன்னேற முடியாது. இவற்றுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும். ஊழல், இலஞ்சம், திருட்டு ஆகியவை காரணமாக சுகாதாரம் மற்றும் கல்விக்காகப் பணமதிப்பிழப்பு சகாப்தத்தை உருவாக்கியுள்ளனர். டீல் அரசியலின் பின் விளைவுகளை சிறையில் உள்ள ரஞ்சன் ராமநாயக்க வெளிப்படுத்தியிருந்தார். 'அவர்கள் அனைவரும் நண்பர்களின் தம்பி' எனக் கூறியிருந்தார். இது தான் தற்போதைய அரசியலின் ஜதார்த்தம். ஐக்கிய மக்கள் சக்தி நட்பு, அறிந்தவர்மற்றும்உறவினர்என்றஅடிப்படையிலான அரசியல் கலாசாரத்தை முற்றாக இல்லாதொழிப்போம்'. - என்று தெரிவித்தார்.

# பதுளையில் இருந்து அம்பாறைக்கு கஜமுத்து கடத்திய இருவர் கைது!



பதுளையில் இருந்து அம்பாறைக்கு கார் ஒன்றில் 3 கஜமுத்துக்களை கடத்திச் சென்ற இருவரை விசேட அதிரடிப் படையினர் கடந்த புதன்கிழமை இரவு அம்பாறை நகர்பகுதியில் வைத்துக் கைதுசெய்து ஒப்படைத்துள்ளனர் என அம்பாறை தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய சம்பவதினமான புதன் இரவு அம்பாறை கண்டி வீதியிலுள்ள அம்பாறை நகர்பகுதியை அண்டிய புத்தங்கல பகுதியில் விசேட அதிரடிப்படையினர் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அம்பாறையை நோக்கிப் பிரயாணித்த காரை விசேட அதிரடிப்படையின் நிறுத்தி மடக்கிப்பிடித்தனர்.

இதில் 3 கஜமுத்துக்களைக் கடத்திவந்த இருவரைக் கைது செய்ததுடன் கஜமுத்து மற்றும் கார் ஒன்றை மீட்டு அம்பாறை தலைமையகப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பாறை தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# அனைத்து மதுபான போத்தல்களிலும் ஏப்ரலுக்கு முன் பாதுகாப்பு முத்திரை!

எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதிக்குள் நாட்டிலுள்ள அனைத்து மதுபான போத்தல்கள் மற்றும் டின்களிலும் பாதுகாப்பு முத்திரை / ஸ்டிக்கர் ஒட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் பல கட்டங்களின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என கலால் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் கபில குமாரசிங்க குறிப்பிட்டார்.

ஜனவரி 3 ஆம் திகதி முதல் நாட்டில் உரிமம் பெற்ற மதுபான ஆலைகள் மதுபானப் போத்தல்கள் மற்றும் டின்களில் பாதுகாப்பு ஸ்டிக்கர்களை ஒட்டுவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புதிய முத்திரைகள் ஒட்டப்பட்ட மதுபான போத்தல்கள் சந்தைகளுக்கு விநியோகிக்கப்பட்டதன் பின்னர் , பழைய மதுபானப் போத்தல்களை விற்பனை செய்து நிறைவு செய்வதற்கு ஏப்ரல் முதலாம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் கபில குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

# நாட்டை மீளக்கட்டியெழுப்ப அவசியமான ஆலோசனைகளை முன்வைக்கத் தயார்!

## கபீர் ஹாசீம் கூறுகிறார்



தற்போதைய அரசாங்கம் கடந்த 2019 டிசெம்பரில் ஆட்சிபீடமேறியவுடன் மேற்கொண்ட சில தீர்மானங்களால் நாட்டின் வருடாந்த வருமானம் பெருமளவால் வீழ்ச்சிகண்டது. அதுவே நாடு இப்போது முகங்கொடுத்திருகக் கூடிய பொருளாதார நெருக்கடிகளுக்கான தொடக்கப்புள்ளியாக அமைந்தது.

அதுமாத்திரமன்றி ஏற்கனவே சர்வதேச தரப்படுத்தல் நிறுவனங்களால் நாட்டுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களைக் கருத்திற்கொண்டு, குறைபாடுகளைச் சீரமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்திருந்தால் இத்தகைய நெருக்கடி ஏற்பட்டிருக்காது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹர்டி சில்வா மற்றும் எரான் விக்ரமரத்ன ஆகியோருடன் இணைந்து எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் ‘பொருளாதாரக் கொள்கைகள் கேந்திர நிலையத்தை’ நிறுவியிருப்பதாகவும், அதனூடாக நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கு அவசியமான ஆலோசனைகளை ‘மாற்று அரசாங்கம்’ என்ற அடிப்படையில் முன்வைக்க விருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு –

எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் கடந்த 2019 ஆம் ஆண்டிலிருந்து நாம் எமது பொறுப்பை ஓரளவிற்கு செயற்திறனான முறையில் நிறைவேற்றியிருக்கின்றோம்.

2019 ஆம் ஆண்டின் இறுதியில் தேர்தலுக்கு முன்னதாக நாட்டின் பொருளாதார குறிகாட்டிகள் ஓரளவிற்கு சாதகமான மட்டத்திலேயே காணப்பட்டன. குறிப்பாக வரவு, செலவுத் திட்டப் பற்றாக்குறை 5 சதவீதத்துக்கும் குறைவான மட்டத்திலும் வெளிநாட்டுக் கையிருப்பு சுமார் 7.8 பில்லியன் அமெரிக்க டொலர்களாகவும் காணப்பட்டது.

அதேபோன்று பொருள்களின் விலைகள் கட்டுப்பாட்டில் இருந்ததுடன் வாழ்க்கைச்செலவும் சீரான மடத்தில் பேணப்பட்டது.

ஏற்றுமதி மூலமான வருமானம் மற்றும் அந்நியச் செலாவணி வருமானம் என்பனவும் உயர்வாகக் காணப்பட்டன. இருப்பினும் பல்வேறு காரணங்களால் 2020 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இந்த நிலை மாற்றமடையத் தொடங்கியது.

அப்போது சிலர் கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடியை அதற்குக் காரணமாகக் கூறியபோதிலும், அதனையும் தாண்டிய பிரச்சினையொன்று இருப்பது தற்போது தெளிவாகியிருக்கின்றது.

எனவே, இவ்வாறானதொரு பின்னணியில் நானும், ஹர் டி சில்வா மற்றும் எரான் விக்ரமரத்ன ஆகியோரும் இணைந்து எமது கட்சிக்குள் பொருளாதாரக் கொள்கைகள் கேந்திர நிலையத்தை உருவாக்கியிருக்கின்றோம்.

நாங்கள் மூவரும் கடந்த அரசாங்கத்தில் பொருளாதாரத்துறைசார் அமைச்சுக்களுக்குப் பொறுப்பாக செயற்பட்டதுடன் அரசியலுக்கு அப்பால் பொருளாதாரத்துறைசார் பின்புலத்தையும் கொண்டிருக்கின்றோம்.

ஆகவே, இப்போது நாங்கள் எதிர்க்கட்சியிலிருந்தவாறு பேசவில்லை. மாறாக ‘மாற்று அரசாங்கம்’ என்ற அடிப்படையில் நாட்டின் நலனை முன்னிறுத்தியே பேசுகின்றோம்.

இதனூடாக நாட்டின் பொருளாதாரத்தைத் தற்போதைய நெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பதே எமது நோக்கமாகும்.

அதன்படி முதலில் எவ்வாறு நாடு இத்தகைய நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டது என்ற கேள்விக்கான பதிலை விளங்கிக்கொள்வது அவசியமாகும். கடந்த 1948 ஆம் ஆண்டு சுதந்திரமடைந்ததிலிருந்து எமது நாடு பொருளாதார ரீதியில் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருந்த போதிலும், அவற்றுக்கு ஈடு கொடுப்பதற்கான இயலுமையையும் நாடு கொண்டிருந்தது.

ஆனால், அந்த நெருக்கடிகள் தோற்றம்பெறுவதற்கு அடிப்படையாக அமைந்த காரணங்களை இனங்கண்டு, அவற்றுக்குரிய தீர்வை வழங்கவில்லை என்பதே உண்மையாகும்.

ஆகவே, ஒவ்வொரு அரசாங்கங்களின்கீழும் நீண்டகாலமாகத் தொடர்ந்துவந்த இப்பிரச்சினைக்குத் தீர்வாக நாட்டின் நிதி மற்றும் பொருளாதாரக் கொள்கையில் முழுமையான மறுசீரமைப்பொன்றைச் செய்வதில் நாம் தோல்வி கண்டிருக்கின்றோம்.

ஆனால், நாட்டின் வரலாற்றில் முதற்தடவையாக நாம் இப்போது வங்குரோத்து நிலையை நோக்கிப் பயணித்துக்கொண்டிக்கின்றோம். குறிப்பாக நாடு தற்போது தீவிர டொலர் நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கின்றது என்பது அனைவரும் அறிந்த விடயமாகும்.

ஏனெனில் தற்போதைய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் செலவுகள் அதன் வருமானத்தை விடவும் பெருமளவிற்கு உயர்வானவையாகக் காணப்படுகின்றன.

மறுபுறம் அரசாங்கம் உற்பத்தியில் ஈடுபடுவதற்குப் பதிலாக அதிகளவிலான கொள்வனவில் ஈடுபடுகின்றது. கடந்த 2019 டிசெம்பரில் இந்தப் பொருளாதார நெருக்கடி ஆரம்பமானபோது கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடி காணப்படவில்லை.

மாறாக கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றுக்கொண்டவுடன் வழங்கப்பட்ட பல்வேறு வரிச்சலுகைகளின் காரணமாக நாட்டின் வருடாந்த வருமானம் பெருமளவால் வீழ்ச்சிகண்டது.

அதனைத் தொடர்ந்து 2020 பெப்ரவரி மாதமளவில் சர்வதேச சந்தையில் உள்நாட்டுப் பிணைமுறிகள் கழிவு விலையில் விற்பனை செய்யப்பட்டன. இவற்றின் விளைவாக நாட்டின் வருமானத்தில் வீழ்ச்சியேற்பட்டபோது, இலங்கையில் பாரிய நிதிநெருக்கடி ஏற்படலாம் என்ற செய்தியே சர்வதேசத்தைச் சென்றடைந்திருக்கும்.

எனவே, இதனைச் சீர்செய்யுமாறு சர்வதேச தரப்படுத்தல் முகவர் நிறுவனங்கள் இலங்கைக்குத் தொடர்ச்சியாக அறிவுறுத்தல்களை வழங்கிவந்த நிலையிலும், மத்திய வங்கியால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாத காரணத்தாலேயே 2020 செப்ரெம்பர் மாதம் சர்வதேச தரப்படுத்தல் நிறுவனத்தால் இலங்கை தரமிறக்கப்பட்டது.

ஆனால் பிட்ச் ரேட்டிங் நிறுவனம் உள்ளிட்ட இரண்டு சர்வதேச தரப்படுத்தல் நிறுவனங்களை கடந்த 2005 ஆம் ஆண்டில் நாட்டுக்குள் கொண்டுவந்த மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம், இப்போது அந்த நிறுவனங்களைக் கடுமையாக விமர்சிக்கின்றது. அதனை அந்தச் சந்தர்ப்பத்திலேயே உரியவாறு கையாளாததன் காரணமாக இப்போது நாட்டின் ஏனைய வங்கிகளும் தரமிறக்கப்பட்டிருப்பதுடன் நிலைமை மேலும் மோசமடைந்திருக்கின்றது.

அடுத்ததாக இரசாயன உர இறக்குமதியை நிறுத்துவதற்கு அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமும் இந்த நெருக்கடி நிலைக்கு முக்கியமான காரணமாகும்.

அதன் விளைவாக விவசாயம் மற்றும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் முழுமையாகப் பாதிப்படைந்து, உள்நாட்டு உற்பத்தி வெகுவாக வீழ்ச்சியடைந்திருக்கின்றது. அதேவேளை, வெளிநாடுகளிலிருந்து உணவுப்பொருள்களை இறக்குமதி செய்வதற்கு அவசியமான டொலர் கையிருப்பில் இல்லை.

எனவே, இவற்றால் ஏற்படப்போகும் உணவுப் பற்றாக்குறை நெருக்கடியின் பிடியில் தற்போது நாடு சிக்கிக்கொண்டிருக்கின்றது. அதன் தொடர்ச்சியாக நாட்டின் நிதி உறுதிப்பாடு தொடர்பில் சர்வதேசத்தின் மத்தியில் காணப்பட்ட நம்பகத்தன்மை இப்போது சரிவடைந்திருக்கின்றது. இவையே தற்போது நாட்டின் பொருளாதாரம் முகங்கொடுத்திருக்கக்கூடிய நெருக்கடிகளுக்குப் பிரதான காரணமாக அமைந்துள்ளன என்று குறிப்பிட்டார்.

## காரைதீவு பிரதேசத்தில் மொழி கொள்கைகளை உறுதிப்படுத்துவதற்கான நிதி வழங்கும் நிகழ்வு!

அச்சங்கங்கள் ஊடாக மொழிக் கொள்கைகளை உறுதிப்படுத்துவதற்கான சில செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான நிதி வழங்கும் நிகழ்வு காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் காரைதீவு பிரதேச செயலகக் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது .

மனித அபிவிருத்தி ஸ்தாபனம் பொது நிருவாக அமைச்சால் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய மொழிகள் சமத்துவ மேன்பாட்டு செயற்திட்டத்தின் ஊடாக அரச மொழிக் கொள்கைகளை உறுதிப்படுத்துதல் ஊடாக சமூக ஒற்றுமைப்பாட்டைச் செயறபடுத்துதல் தொடர்பான செயற்பாடுகளைத் தெரிவுசெய்யப்பட்ட சக வாழ்வு சங்கம்கள் ஊடாக மேற்கொண்டு வருகிறது. இந்த நிகழ்விற்கு அம்பாறை மாவட்ட பதில் அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன், காரைதீவு உதவி பிரதேச செயலாளர் எஸ். பார்த்தீபன், மனித அபிவி ருத்தி ஸ்தாபன பணிப்பாளர் கலாநிதி பி.பி.சிவப்பிரகாசம், உதவிக் கல்விப் பணிப்பாளரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான வீ ரி.சகாதேவராஜா உட்பட பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

## மருத்துவ கருத்தமர்வு

*வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ZOOM செயலில் ஊடாக ‘யாவருக்கும் நலம்’ எனும் நிகழ்ச்சி தொடரானது பிரதி சனிக்கிழமை தோறும் மாலை 7.00 மணி - 9.00 வரை இடம் பெற்று வருகின்றது.*

*நாளைய தினம் ‘சிறுநீரக நோய்களும் சமுதாய சுமைகளும்’ எனும் தலைப்பில் மருத்துவ கருத்தமர்வு நடைபெறும்.*

Meeting ID : 89985282023
Pass code : 354485





## குமாரின் நினைவு நிகழ்வு மட்டக்களப்பிலும் நடந்தது!

சிறிலங்கா அரசபயங்கரவாதத்தால் கொழுமபில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 22 ஆம் ஆண்டு நினைவேந்தல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட பணிமனையில் நடைபெற்றது.

இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தருமலிங்கம் சுரேஸ், கோரளைப்பற்று பிரதேச சபை உறுப்பினர குணசேகரன், செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

## திருமுறைகள் கூறும் ஆகமவழிபாட்டுமுறைகள்

மண்ணுலகில் வாழும் ஆன்மாக்களை நல்வழிப்படுத்தி மேலான நிலையை அடையச்செய்வது வழிபாடாகும். நல்வழிகள் வாழ்வின் உயர்ந்த இடத்திற்குக் கொண்டுசேர்க்கின்றன. அவ்வாறு நல்வழிகளையும் சைவ வழிபாட்டு முறைகளையும் நெறிப்படுத்த சிறந்த இடம் ஆலயமாகும். ஆலய அமைப்பும் வழிபாட்டுமுறைகளையும் இருபத்தெட்டு ஆகமங்கள் கூற அதன் விளக்கமுறைகளை பன்னிரண்டு சைவத் திருமுறைகள் எடுத்துரைக்க அவையிரண்டும் ஆலயங்களில் இன்றியமையாதனவாயிற்று. ஆகமங்களுக்கும் திருமுறைகளுக்கும் உள்ள தொடர்பு மிக நெருக்கமானது.

ஆகமங்கள் இறைவனால் அருளப்பட்டளை என்னும் பெருமையைத் தெளிவாக விளக்கும் நூல்களுள் திருமுறைகளே முதலிடத்தைப் பிடிக்கின்றன. இறைவனே உமையம்மைக்குக் குருவாக இருந்து உபதேசம் செய்த வரலாறு திருமுறைகளில் பேசப்படுகிறது.

மன்னுமாமலை மகேந்திரமதனில் சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும் எனவும் -

மாவேட்டாகிய ஆகமம்வாங்கியும் மற்றவை தம்மை மகேந்திரத்திருந்து உற்ற ஐம்முகங்களால் பணித்தருளியும்" எனவும் மாணிக்கவாசகர் குறிப்பிடுகிறார்.

மகேந்திரப்பொன் மலையால் மலைமகளுக்கு அருளும் குரு நீ எனத் திருவிசைப் பாவில் திருமாளிகைத்தேவர் குறிப்பிடுகிறார்.

பெரியபுராண ஆசிரியர் சேக்கிழார் பின்வருமாறு கூறுகிறார்:-

**நங்கை உன் நிறைகாதலை நோக்கி நாயகன் திருஉள்ளத்தில் மகிழ்ந்தே**
**அங்கன் எய்தியமுறுவலுடன் தோன்ற அடுத்துநின்பால் எனவினவ**
**இங்குநாத! நீமொழிந்த ஆகமத்தின் இயல்பினால் உனைஅர்ச்சனை புரிய**
**பொங்குகின்றது என் ஆசைஎன நினைந்துப் போகமார்த்தஓல் புண்முலை யாள் போற்றஎனவும்**
**எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும்**
**உண்மையாவது பூசனை என உரைத் தருள**
**அண்ணலார்தமை அர்ச்சனை புரிய ஆதரித்தாள்**
**பெண்ணில் நல்லவளாயினபெருந்தவக் கொழுந்து**

(திருக்குறிப்புத் தொண்டர்புராணம்)

இவ்வாறு இறைவியே சிவனைப் பூசனை செய்த சிறப்புக் கூறப்படுகின்றது.

இறைவனேஆகமமாகியும் அதனை மொழிபவனாகவும் இருக்கிறான் என்பதை திருமுறைகள் தெளிவாகத் தெரியப் படுத்துகின்றன.

ஆகமச் செல்வனார் - சம்பந்தர் (திருவெற்றியூர்ப்பதிகம்).

அண்டர்தமக்காக ஆகமநூல் மொழியும் ஆதி - சுந்தரர்.

ஆகமமாகி நின்று அண்ணிப்பான்தாள் வாழ்க - மாணிக்கவாசகர்.

எண்ணில் ஆகமம் இயம்பினான் ஈசன் - திருமந்திரம்.

சைவத்திருக்கோயில் வழிபாட்டில் முதலில் நம்மைத் தூய்மைப்படுத்தி, இறைவனைத் தூய்மையாக வழிபடவேண்டும் என்பது நமது பாரம்பரியமுறை. அதனை ஆகமங்கள் நன்கு வலியுறுத்துகின்றன. நம்மை சிவனாக பாவனைசெய்து நமக்குள் இருக்கும் ஆன்மாவை பரமாத்மா என உணர்வதற்காகவே உடலையும் உள்ளத்தையும் தூய்மையடையச் செய்கிறோம்.

திருநாவுக்கரசர் காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக வாய்மையே தூய்மையாக மனமணிலிங்கமாக - எனக் குறிப்பிடுகிறார்.

திருமூலர் உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம் - (திருமந்திரம்)எனக் குறிப்பிடுகிறார்.

சைவப்புலவர்
சிவஸ்ரீ பால.இந்திரக்குருக்கள்

## வஜ்ராசனம்

*(கணுக்காலின் மீது அமர்ந்த நிலை)*

வாரம் ஓர் ஆசனம்



**செய்(படி)முறைகள்:**

1) நேராக நிமிர்ந்து உட்கார்ந்து இரு கால்களையும் நேராக நீட்டவும். பாதங்களிரண்டும் இணைந்திருக்க வேண்டும். உள்ளங்கைகளை புட்டப்பகுதியின் இரு பக்கங்களும் தரையில் வைக்கவும்.

2) வலக்கையின் உதவியால் வலக்காலை மடக்கி வலது புட்டத்துக்கு கீழ் வைக்கவும்.

3) இடது காலை இடக்கையின் உதவியால் மடக்கி இடது புட்டத்துக்குக்கீழ் வைக்கவும். முழங்கால்களிரண்டும் இணைந்திருக்கத்தக்கவாறு உள்ளங்கைகளை தொடைகளின் மீது வைக்கவும்.

4) உடலின் முழுப்பாரமும் குதிக்கால்களின் மீது இருக்குமாறு நிமிர்ந்து இருந்தபடி கண்களை மூடி ஆழமாக சுவாசிக்கவும்.

5) பின்னர் இடது காலையும் வலது காலையும் விடுவித்து நீட்டி ஆரம்ப நிலைக்கு வரவும்.

**பலன்கள்:** காலிலுள்ள எல்லா மூட்டுக்கள் மற்றும் தசைகளை தளர்த்துகிறது. வயிற்றுப்புற பகுதிக்கு அதிக இரத்த ஓட்டம் கிடைக்கிறது. உடல் பலமடைகின்றது. மனம் அமைதியடைகின்றது. இரப்பை, குடல் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு நல்லது. இடுப்பு வலி, வாயுப்பிரச்சினை, சமிபாட்டுப்பிரச்சினை, இரத்த அழுத்தம், மூலவியாதி, மலச்சிக்கல் முதலியவற்றுக்குச் சிறந்த ஆசனம். உடல் பலமாகி மனவலிமை, மன உறுதி, உண்டாகும். பாதங்கள், கணுக்கால்கள், இடுப்பு, தொடைகள் அவைசார்ந்த தசைகள் எலும்புகள் என்பன பலம் பெறுகின்றன.

- ஸ்ரீ. நதிபரன் -
(யோகா போதனாசிரியர், நல்லூர் திவ்ய ஜீவன சங்கம்)

## திரு நல்லூர்த் திருப்புகழ்

அருவும் உருவும் அழகும் ஒளியும்
திருவும் புனைந்த - வடிவேலாய்
அரிய தவமும் அமர நிலையும்
பெருக எனைவந் - தருள்வாயே
இயலும் இசையும் இணைந்த தமிழின்
இறைவனாகி - ஒளிர்வோனே
இசைந்து யோகி எழுதும் புகழின்
இனிமை காண - வருவாயே
அமரர் துயரம் களைய வமரில்
அயிலை எறிந்த - பெருவீரா
குமரி யிருவர் குலவி அணையக்
கோல மயிலில் - வருவோனே
கமல மலரும் கடம்பும் அணிந்து
கனக சபையில் - உறைவோனே
கருதும் நல்லைக் குமரன் என்று
காட்சி அருளும் - பெருமாளே




## முருக வழிபாடு

வழிபாடு என்பது கடவுளின் மனதை கனியவைக்கும் செயல். வழிபாடு என்பதைப் பூஜை என்று கூறலாம். பூஜையை அன்பால் செய்யும் பூஜை, ஆகம விதிப்படியான பூஜை என இருவகைப்படுத்தலாம். அன்பால் செய்யும் பூஜை பற்றி திருமுருகாற்றுப்படையுள் அழகாக குறிக்கப்பட்டுள்ளது.

ஐங்குறுநூற்றில் மலைச்சாரலிலே கருங்குவளை பூத்துக்கவின்செய்கின்றசுனையோடுகூடியஊர்ப்பொதும்பிலே வேலன் புது மணல் பரப்பித் தோரணங்களாலும் அழகு செய்துகழங்கு பார்த்து வெறியாடுகிறான் என்று சொல்லப்படுவதும், அவ்வாறு பூஜை செய்கின்ற வேலன் சூர்மாத்தடிந்த சுடர் வேலோய் என்று கூறி வழிபடும் வேளை முருகன் வெளிப்பட்டு வரங்களை தருகின்றான் என்று பரிபாடல் பகர்கின்றது. இவை எல்லாம் அன்பு பூஜைக்கு சான்றாகவும் முருக வழிபாட்டின் தொன்மைக்கும் சான்றாகின்றன.

மேலும் திருமுருகாற்றுப்படையில் திருவாவினன்குடி என்று கூறப்படும் பழனி, திருவேரகம் எனப்படும் சுவாமிமலையிலும் விதிமுறைப்பூஜையின் இயல்பும் கூறப்பட்டுள்ளது. முருகப் பெருமானின் ஆகமவிதிவழிபாட்டு முறையை கூறும் ஆகம நூல்களாவன காரணாகமம், காமிகாகமம், சுப்ரபேதம், குமாரதந்திரம், அம்சுமத்பேதம் என்பனவகும். இவற்றில் குமாரதந்திரம் முருகப் பெருமானது வரலாறு,வழிபாட்டுமுறை, ஆலய அமைப்பு முறை, யந்திர அமைப்பு முறை, பிரதிஷ்டைமுறை, உற்சவ முறை என்று எல்லா விவரங்களையும் கூறுகின்றது. இங்கு முருகனது பதினாறுவகையான திருவுருவ அமைப்புகள் வழிபாட்டுக்காக சொல்லப் பட்டுள்ளன. அவையாவன:- சக்திதரர், ஸ்கந்தர், தேவசேனாபதி,



ஸுப்ரமணியர், கஜவாகனர், சரவணபவர், கார்த்திகேயர், குமாரர், ண்முகர், தாரகாரி ,சேனானி, பிரமசாஸ்தா, வள்ளிகல்யாணசுந்தரர், பாலசுவாமி, கிரவுஞ்சபேதனர், ஸிகிவாஹனர் என்பனவாகும்.

இவ்வாறு ஆகம விதிக்குட்பட்டு ஆலயங்கள் அமைத்து, அங்கு மேற் குறிப்பிட்ட இறைவடிவங்களில் ஒன்றை பிரதிஷ்டைசெய்யும் கிரியை கும்பாபிஷேகம் எனப்படுகின்றது. இந்த கிரியையின் போது பிரபஞ்சமெங்கும் பரந்திருக்கும் இறை சக்தியை ஐம்பூதங்களின் மூலமாக ஒன்று குவித்து அவற்றை பிரதான கும்பத்தில் சேர்த்து மூல மூர்த்தியில் சேர்ப்பதற்காகவே கும்பாபிஷேகத்தில் பல எண்ணிக்கை களில் ஹோமகுண்டங்கள் அமைத்து பூஜிப்பது வழக்கம்.

**'ப்ரமண ஆஹாசாத் ஸம்பூதஹ , ஆஹாசாத் வாயுஹ" வாயோர் அக்னிஹி, அக்னேர் ஆபஹ, ஆபஹப் ப்ருதிவீ"**

என்பது உபநிடத வாக்கியம். அதாவது ப்ரம்மமானது ஆகாயத்தில் இருந்து வாயுவுக்கும், வாயுவில் இருந்து அக்னிக்கும், அக்னியில் இருந்து நீரிடமும், நீரில் இருந்து நிலத்திற்கும் படிப்படியாக இறங்கி வருகின்றது. முருகப் பெருமானின் திருஅவதாரத்தை பார்த்தால் சிவபிரானின் நெற்றிக்கண்ணில் தோன்றிய அக்னிச்சுடராகிய முருகப் பெருமான் ஆகாய மார்க்கமாக வாயுபகவானிடமும் பின் அக்னி பகவானிடமும் அதன்பின் நீரிடத்திலும் சென்று இறுதியில் பிருதிவி என்னும் நிலத்தின் அம்சமாகிய தாமரை பூவில் தங்கி குழந்தை வடிவம் பெறுகிறார். ஆக இத்திருவவதாரம் மேற்குறிப்பிட்ட உபநிஷத் வாக்கியத்தை எமக்கு உறுதிப்படுத்துகின்றது. இவ்வாறு வேத ஆகமநெறியிலும் முருக வழிபாட்டை நாம் காணலாம்

" முருகா என்று ஓதுவார் அருகா நலம் பெறுவர் "

- சிவஸ்ரீ கைலை சந்திரசேகர சிவாச்சாரியார் (நாதன் குருக்கள்)
(சிட்னி முருகன் ஆலயம், ஆஸ்திரேலியா)

காலைக்கதிர் Kalaikkathir

## யாழ்.விமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அவர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நல்லாட்சி அரசில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டுதலின் கீழ் யாழ்ப்பாணம் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் முகமாக பலாலி சர்வதேச விமான நிலையம் புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்குத் திறந்து விடப்பட்டது.

குறிப்பாக வட பகுதியில் உள்ள மக்கள் குறைந்த நேரத்தில் குறைந்த செலவுடன் தென்பகுதிக்கு வந்து செல்வதற்கும் தென்னிந்தியாவுக்குச் சென்று வருவதற்குமாக இந்த விமான நிலையம் திறந்து விடப்பட்டது

அது வடபகுதி மக்களுக்குக் கிடைத்த ஒரு நல்ல சந்தர்ப்பம். ஆனால், இந்த அரசானது அவ்வாறான சந்தர்ப்பத்தை வழங்க மறுத்து தற்போது விமான நிலையம் மூடப்பட்டுள்ளமை மிகவும் கவலையளிக்கின்றது.

எனினும், பொறுத்திருந்து பார்ப்போம். நான் தற்போது அரசியலில் இல்லை. அத்தோடு நான் அங்கம் வகித்த கட்சியிலிருந்து விலகி இருக்கின்றேன். எனினும், நான் நினைக்கின்றேன் இந்த அரசின் மீது மக்கள் வெறுப்புக் கொண்டுள்ளார்கள். இந்த அரசு விரைவில் வீடு செல்ல வேண்டி வரும். எனினும், நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து இந்த அரசுக்கு எதிராககுரல் கொடுப்பதற்காக ஒரு கூட்டணியாகச் செயற்படும் காலம் விரைவில் கைகூடும். அது விரைவில் இடம்பெறும் என எதிர்பார்க்கிறேன் - என்றார்.

## ராஜபக்ஷ அரசை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரோனா வைரஸ் தொற்றால் தனிமைப்படுத்தப்பட்டுள்ள ராஜித எம்.பி., இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்க வேண்டாம் எனவும், அவர் தலைமையிலான அரசை ஆட்சியில் ஏற்ற வேண்டாம் எனவும் அன்று நாட்டு மக்களிடம் நாம் கேட்டிருந்தோம். ஆனால், மக்களில் பலர், ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபயவுக்கு வாக்களித்து அவரை ஜனாதிபதியாக்கினர்; அவர் தலைமையிலான அரசை நாடாளுமன்றத் தேர்தலில் ஆட்சியில் அமர்த்தினர். ஆனால், இறுதியில் நடந்தது என்ன?

இன்று ஒட்டுமொத்த நாட்டு மக்களையும் நடுவீதியில் கொண்டு வந்து விட்டுள்ளது ராஜபக்ஷ அரசு. நாட்டின் பொருளாதாரம் படுவீழ்ச்சியடைந்துள்ளது. பட்டினிச் சாவை நாடு எதிர்நோக்கியுள்ளது. இந்த அரசை மக்கள் விரைவில் அடித்து விரட்டுவர். சஜித் பிரேமதாஸ தலைமையில் புதிய ஆட்சி மலரும் - என்றார்.

## ஆரியகுளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆரியகுளப் புனரமைப்பு திறப்பு விழாவில் கலந்துகொள்ள வருகின்றபோது சிங்கள பௌத்த எஜமான்களைத் திருப்திப்படுத்துவதற்காக ஆளுநர் கண்டிய மேள தாளங்களுடன் வந்தபோது சரி வந்துவிட்டு போகட்டும் என்று விட்டுவிட்டோம்.

அன்றைய தினம் குளத்தைத் திறக்க வந்திருந்தபோது ஆளுநர் யாருடைய ஆளுகைக்குள் ஆரியகுளம் உள்ளது என்பதைப் பற்றி விசாரித்து இருக்கலாம். ஆனால், விடிய விடிய இராமர் கதை விழுந்தால் ராமன் சீதைக்கு என்ன முறை என்பது போலவே ஆளுநரின் செயற்பாடு காணப்படுகின்றது.

யாழ்.மாநகர மேயர் ஆரியகுள அழைப்பிதழை வழங்கியபோது இது யாருடைய ஆளுகைக்குள் இருந்தது என்பதை அவரிடம் கேட்டிருக்க வேண்டும்.

பௌத்தர்கள் விரும்பினால் விகாரைக்கும் இந்துக்கள் விரும்பினால் ஆலயங்களுக்கும் கிறிஸ்தவர்கள் தேவாலயங்களுக்கும் முஸ்லிம்கள் பள்ளிவாசல்களுக்கும் செல்ல முடியும். ஆரியகுளத்திற்கு மதச்சாயம் தேவையில்லை. மதங்களைத் திணிக்க முற்படக் கூடாது. அவ்வாறு மதங்களைத் திணிக்க முற்பட்டால் அந்தக் குளத்தில் அந்நியேட்டி அஸ்தியைக் கரைக்கத் தமிழ் மக்கள் முற்படுவார்கள். வீணாக இதனைப் பிரச்சினையாக்க வேண்டாம்.

தொல்லியல் என்று சொல்கிறீர்கள். தொல்லியல் சின்னங்களில் ஏன் மதத்தை கொண்டு வருகின்றீர்கள். குருந்தூர்மலையைத் தொல்லியல் என்று மூடி வைத்துவிட்டு பல விடயங்களைச் செய்து வருகின்றீர்கள். இவையெல்லாம் எந்த விதத்தில் நியாயம்?

ஆரியகுளம் சேற்றுடன் காணப்படும்போது ஒருவரும் திரும்பிப் பார்க்கவில்லை. அதன் பின்னர் யாழ். மாநகர சபையின் முயற்சியால் தற்போது அது அழகாகச் சீரமைக்கப்பட்டு மக்கள் தமது பொழுதுபோக்கு நேரத்தை செலவழிப்பதற்காக அங்கு வருகின்றனர்.

ஆரியகுளத்தை அரசு கையகப்படுத்தப் பார்ப்பது எமக்குத் தெரியும். வடக்கு மாகாண ஆளுநர் ஜனாதிபதியின் எடுபிடி, அவர் தன்னுடைய வேலைகளை மட்டும் பார்க்க வேண்டும். எமக்கு விளையாட்டுக் காட்ட வேண்டாம். இந்த விடயத்தில் யாழ். மாநகர மேயரைப் பணியவைக்கும் செயற்பாட்டுக்கு தமிழ் மக்கள் துணை போக மாட்டார்கள் - என்றார்.

## தமிழீழ வரைவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் ஒப்படைப்பதற்காகத் தமிழ்பேசும் தரப்புக்களின் பொது நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கும் ஆவணத்தில் வடக்கு, கிழக்கு தமிழர்களின் கட்சிகளின் தலைவர்கள் மாத்திரம் நேற்று ஒப்பமிட்டனர். இதில் மலையக, முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் எவரும் ஒப்பமிடவில்லை. இது தொடர்பில் நேற்றிரவு ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்பேசும் கட்சிகளுக்கிடையில் - அதன் தலைவர்களுக்கிடையில் பொதுவான இணக்கப்பாடு இல்லை; ஒற்றுமை இல்லை. இந்தியப் பிரதமருக்கான பொது ஆவண விவகாரம் இதை வெளிக்காட்டுகின்றது.

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தைச் சேர்ந்த தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் தமிழ்பேசும் கட்சிகளோ அல்லது இந்தியா உள்ளிட்ட நாடுகளோ ஒருபோதும் அரசியல் தீர்வை வழங்காது.

இலங்கை எனும் எமது நாட்டில் உள்ளகப் பிரச்சினைகளில் தலையிட வெளிநாடுகளுக்கு அனுமதி இல்லை. நாட்டின் அரசுதான் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்கும்.

தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்கும் நடவடிக்கையில் எமது அரசு ஈடுபட்டுள்ளது. ஆனால், தமிழ்பேசும் கட்சிகளின் தலைவர்கள் எம்மை நாடாமல் சர்வதேசத்தை நாடுவதுதான் விசித்திரமாகவுள்ளது - என்றார்.

## திருமலை எண்ணெய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்பந்தத்தில், திறைசேரி செயலாளர், காணி ஆணையாளர் நாயகம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் மற்றும் Trinco Petroleum Terminal (Pvt) Ltd கைச்சாத்திட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்தியா வசமிருந்த 99 எண்ணெய்க் குதங்களில், 85 எண்ணெய்க் குதங்கள், இலங்கையின் கட்டுப்பாட்டில் இருக்கும் எனவும் அமைச்சர் கம்மன்பில தனது ருவிட்டர் பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## இந்தியப் பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்ட ஆவணத்தில் சம்பந்தன் உட்பட பல தலைவர்களும் நேற்று ஒப்பமிட்டனர். அது விரைவில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் ஊடாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பிவைக்கப்பட்டவுள்ளது.

அந்த ஆவணத்தில் இரா.சம்பந்தன் (தலைவர் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு), சி.வி.விக்னேஸ்வரன் (தலைவர் - தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி), சுரேஷ் பிறேமச்சந்திரன் (தலைவர் - ஈ.பி.ஆர்.எல்.எவ்.), என்.ஸ்ரீகாந்தா (தலைவர் - தமிழ்த் தேசியக் கட்சி), செல்வம் அடைக்கலநாதன் (தலைவர் - ரெலோ), த.சித்தார்த்தன் (தலைவர் - புளொட்) ஆகியோர் நேற்று ஒப்பமிட்டனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றிரவு கொழும்பு சென்ற மாவை சேனாதிராஜா (தலைவர் - இலங்கைத் தமிழரசுக் கட்சி) இன்று காலை அந்த ஆவணத்தில் ஒப்பமிடுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனுடனும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நேற்று தொலைபேசியில் பேசினார். இதன்போது மலையக மக்கள் விவகாரம் தொடர்பில் மனோ கணேசன் தரப்பினதும், முஸ்லிம் மக்கள் விவகாரம் குறித்து ரவூப் ஹக்கீம் தரப்பினதும் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு அவர்களின் பங்களிப்பு இல்லாமலேயே பொது ஆவணத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பும் முடிவை சம்பந்தன் எடுத்தார்.

கடந்த 21ஆம் திகதி கொழும்பிலுள்ள குளோபல் டவர் ஹோட்டலில் நடைபெற்ற தமிழர் தரப்புக் கட்சிகளின் ஆலோசனைக் கூட்டத்தில் இறுதி செய்யப்பட்ட கடிதமே இப்போது தமிழ்க் கட்சிகளின் தலைவர்களால் ஒப்பமிடப்பட்டு இந்தியப் பிரதமருக்கு அனுப்பப்படுகின்றது.

சம்பந்தன் தலைமையிலான தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் இந்தியத் தூதுவரைச் சந்தித்து இந்தக் கடிதத்தை அவர் மூலம் இந்தியப் பிரதமருக்கு அனுப்பி வைப்பர் எனத் தெரிகின்றது.

# 'மொட்டு' அமைச்சரவையில் பாரிய மறுசீரமைப்புக்குக் கோட்டா திட்டம்

## 60 வீத மாற்றம் இடம்பெறலாம் எனத் தெரிவிப்பு



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசின் அமைச்சரவையில் பாரிய மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளார் என்று சிங்கள இணைய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி அமைச்சரவையில் 60 வீதமான மாற்றங்கள் இடம்பெறக்கூடும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமைச்சுகளின் விடயதானங்கள் கைமாற்றப்படவுள்ளன. புதிதாக எவரும் அமைச்சரவைக்குள் உள்வாங்கப்படமாட்டார்கள்.

அத்துடன், சுசில் பிரேமஜயந்தவின் பதவி நீக்கத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு புதிய இராஜாங்க அமைச்சர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார்.

# 'மொட்டு' கூட்டு அரசிலிருந்து வெளியேறுவாரா மைத்திரி?

அரசுக்குள் ஒழுக்கமாக இருக்க முடியாவிட்டால், வெளியேறுவதே நல்லது என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர்கள் பதிலடி கொடுத்துள்ளனர்.

மாத்தளையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கட்சிக்கூட்டமொன்றில் உரையாற்றிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன, அரசின் செயற்பாடுகளைக் கடுமையாக விமர்சித்தார். இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து சுசில் பிரேமஜயந்த நீக்கப்பட்டுள்ளமையையும் வன்மையாகக் கண்டித்தார்.

நேற்றுமுன்தினம் அநுராதபுரத்தில் நடைபெற்ற கூட்டமொன்றிலும் அரசு மீது அவர் கடும் விமர்சனங்களை முன்வைத்திருந்தார்.



இவ்வாறானதொரு பின்புலத்திலேயே 'மொட்டு' கட்சி உறுப்பினர்கள் மைத்திரிக்குப் பதிலடி கொடுக்க ஆரம்பித்துள்ளனர். அவரை அரசில் இருந்து வெளியேற்ற வேண்டும் எனவும் வலியுறுத்தி வருகின்றனர்.

## ஜீவனை விவாதத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும், இதனைத் தன்னால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் நிரூபிக்க முடியும் எனவும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் தன்னுடன் விவாதத்துக்கு வருமாறும் அவர் வடக்கு மாகாண ஆளுநருக்கு அழைப்பு விடுத்தார்.

யாழ். ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவுக்கு 14 மெய்ப்பாதுகாவலர்களும், 6 சாரதிகளும் காணப்படுகின்றனர். இவர்களுக்காகப் பல இலட்சம் ரூபாக்கள் செலவிடப்படுகின்றன. அத்துடன் ஆளுநர் தனது எரிபொருள் மற்றும் ரீசேட் கொள்வனவுக்காகப் பல இலட்சம் ரூபாவை மக்களின் வரிப்பணத்தில் செலவிடுகின்றார்.

தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் மூலம் இதனை வெளிப்படுத்துவோம் அல்லது பகிரங்க விவாதத்துக்கு ஆளுநர் தயாரா?

ஆளுநர் நிகழ்ச்சிகளுக்கு வருவதற்குப் பெருமளவு பாதுகாப்பு கெடுபிடிகள் இடம்பெறுகின்றன. ஆளுநரின் உயிருக்கு ஆபத்து உள்ளதா? - என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள 076 443 8619 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

# சர்வதேசத்தை அண்டி நிற்பது சரியா?



என்.சத்தியமூர்த்தி

அக்க ரை றை அலசல்

எப்போதும் போலும் இப்போதும், இனப்பிரச்சினைக் குத் தீர்வு சர்வதேச சமூகத்தால் பெற்றுத் தர முடியும் என்ற எண்ணம் மீண்டும் விதைக்கப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால், சர்வதேச சமூகத்தால் மட்டுமே பெற்றுத் தர முடியும் என்ற எண்ணம் மீண்டும் ஒரு முறை முன்னெடுக்கப்படுகிறது. இது தவறான புரிதல், அல்லது தவறான வழிகாட்டல் தவிர மற்ற ஒன்றும் அல்ல.

இதில் குறிப்பாக, அமெரிக்கா என்ற வல்லரசு நினைத்தால், இலங்கை அரசின் நிலைபாட்டையும், சிங்கள - பௌத்த பேரினவாதிகளின் மனநிலையையும் மாற்றிவிட முடியும் என்ற எண்ணவோட்டம், சுமந்திரன் போன்ற தலைவர்களிடையே மீண்டும் தலை தூக்கி, விருட்சமாக வளர்ந்து வருகிறது. இது, உள்நாட்டு பேச்சுகள் மூலம் தமிழர் தரப் பிற்கு ஒரு அரசியல் தீர்வை பெற்றுத் தரும் என்ற எண்ணத்தை தோற்றுவிக்க ஆரம்பித்துள்ளது.

இன்றைய பொருளாதார நிலைமையை கருத்தில் கொண்டு, ராஜபக்ஷாக்கள் தலைமையிலான அரசிற்கு, ஏதோ அமெரிக்கா சுட்டிக்காட்டும் இடத்தில் கையெழுத்திடும் கட்டாயம் தோன்றி உள்ளது என்பது போன்ற ஒரு மாயை உருவாகப்பட்டு வருகிறது. அது தவறான எண்ணப்போக்கு. நினைப்பதற்கு மாறான எதிர்வினையை தோற்றுவிக்கும் எண்ணவோட்டம் மற்றும் நிலைப்பாடு.



முதலில், பொருளாதார பிரச்சினையை எடுத்துக் கொண்டால், சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனுதவி கோரப்போவதில்லை என்பதில் அரசு உறுதியாக இருப்பதாக அறிவித்துள்ளது. காரணம், நிதியத்தின் பெட்டி சாவி, அமெரிக்காவின் கையில் இருப்பதுதான். எங்கே, நிதியத்தின் கடனுதவிக்கு உதவுவதாக கூறி, ஐ.நா. மனித உரிமை கவ்ஸிலின் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல் விசாரணையில் அமெரிக்கா, இலங்கையைச் சிக்க வைத்து விடுமோ என்ற அச்சம் அரசக்கு இருக்கிறது.

இந்த அரசு என்றல்ல, நாட்டில் பதவியில் இருக்கும் எந்தவொரு அரசிற்கும் இத்தகைய தேர்ந்தெடுத்தல், தேர்தல் – அரசியல் ரீதியாகப் பிரச்சினையான வியம். இதன் காரணமாகவே தமிழ் தேசிய கூட்டமைப்பின் உதவியால் மட்டுமே பதவியிலிருந்த முந்தைய மைத்திரி – ரணில் அரசும், தமிழர் சார்ந்த எந்த பிரச்சினையிலும் செயல்படுத்தக் கூடிய வகையிலான எநத முடிவையும் எடுக்கவில்லை, முயற்சிகளும் செய்யவில்லை.

### தமிழ் - சிங்கள வாக்கு

இதுவே இன்றைய நிதர்சனமும் கூட. தமிழ், முஸ்லிம் மற்றும் மலையகத் தமிழர் என்ற மூன்று சிறுபான்மை இனத்தவரின் வாக்குகளையும் கடந்த 2019 ஜனாதிபதி தேர்தலில், எதிர்கட்சிகளின் பொது வேட்பாளரான சஜித் பிரேமதாசா அள்ளிக் கொண்டார். அதனால் மட்டுமே. அவரது மொத்த வாக்குகளும் 42 சதவீதத்தை எட்டி பிடித்தது. ஆனால், வெற்றி பெறுவதற்கு அவருக்கு மேலும் சிங்களவர் வாக்கு அதீத அளவில் தேவை என்பதே அவரது தேர்தல் தோல்வி உணர்த்தியது.

தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார சூழலில், அடுத்த 2024 ஜனாதிபதி தேர்தலில் அதிகாரத்தில் இருப்பவருக்குப் பெரும் தோல்வி ஏற்படும் என்று யாராவது கருதினால், அதனை உறுதிப்படுத்த எந்த விதமான ஆதாரமும் இல்லை. இன்றையில் இருந்து, அடுத்த இரண்டு ஆண்டுகளில் பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டால், சிங்கள மக்கள் இனவாத அரசியல் ரீதியாக தங்களது தேர்தல் முடிவுகளை எடுக்கும் நிலை மீண்டும் தோன்றலாம்.

இது சஜித் அணியினருக்கு நன்றாகவே தெரியும். அதிலும் குறிப்பாக, கடந்த 2019 தேர்தலில், சஜித் தனக்கு சொந்தமான அம்பாந்தோட்டை மாவட்த்திலேயே, ஆக குறைந்த 25 சதவீத வாக்குகளை பெற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும், ஜனாதிபதி தேர்தலுக்கு அப்பால், அடுத்து வரும் நாடாளுமன்ற தேர்தலில் சஜித் அணியினருக்கு, சிங்களவர் வாக்குகளே தேவை. அங்கு சிறுபான்மையினர் வாக்கு அவர்களுக்கு உரித்தானது அல்ல.

### சீனாவை தேடி...

சர்வதேச நாணய நிதியத்தை அரசு நாடப்போவதில்லை என்று அரசு முடிவு எடுத்திருக்கிறது என்றால், அதன் பின்னர் சீனாவிடம் இருந்து அத்தகைய உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கை இருப்பதாகவே தோன்றுகிறது. அவ்வாறு நடக்குமேயானால், அமெரிக்கா சார்ந்து சர்வதேச நிதியத்தை அணுகும் அவசியம் இந்த அரசுக்கு இருக்காது.

இது தவிர, ராஜபக்ஷாக்களுக்கு அப்பால் சென்று, சிங்கள அரசியல் மற்றும் அரச தலைமைகள் எதுவுமே, சீனாவை உதறி தள்ளி, அமெரிக்காவை அரவணைக்கப் போவதில்லை. முந்தைய மைத்திரி – ரணில் அரசின் பல்வேறு முன்னெடுப்புகளைக் கணக்கிட்டால், இந்த உண்மை எளிதாக புலப்படும். குறிப்பாக அம்பாந்தோட்டையில் நாட்டின் ஒரு பகுதியை சீனாவிற்கு 99 ஆண்டு குத்தகைக்கு விட்டது, ராஜபக்ஷாக்கள் நாட்டைக் கடனாளிகளாக்கி விட்டனர் என்று கூறி விட்டு, அவர்களிடமே மீண்டும் மீண்டும் கடன் வாங்கியது, போன்ற அந்த அரசின் முடிவுகள் எல்லாம் இந்த உண்மையை உறுதி செய்யும்.

இது தவிர, இலங்கை அரசின், ஐ.நா. சார்ந்த ராஜதந்திர அரசியல் அணுகுமுறை ஒன்றும் உண்டு. ஜெனிவாவில் மனித உரிமைகள் கவுன்ஸிலின் எந்தவொரு முடிந்த முடிவும் ஐ.நா. பாதுகாப்பு சபையின் முன் வைக்கப்பட வேண்டும். அங்கு, சீனா மற்றும் ரஷ்யா ஆகிய இரு நாடுகளின் வீட்டோ எனப்படும் தடுப்பதிகார வாக்கு, அரசுக்கு எதிரான முடிவுகளைக் காணாமல் போக செய்யமுடியும்.

இந்த இரு நாடுகளுக்கு இடையேயும் கூட இப்போதும் சீனாவின் கைதான் சர்வதேச அளவில் ஓங்கி உள்ளது. தனது வீட்டோ வாக்கு என்று மட்டுமல்லாமல், தனது நட்பு நாடுகளின் வாக்குகளையும் பாதுகாப்பு சபையில் இலங்கைக்கு ஆதரவாக வாங்கி கொடுக்கும் நிலைமையில் சீனா உள்ளது. இது தவிர, அமெரிக்கா போன்ற மேலை நாடுகளைப் போல் இல்லாமல், இலங்கையின் உள்நாட்டு அரசியலில் சீனா மூக்கை நுழைப்பது இல்லை. இது. சிங்கள ஆட்சியாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்.



இவை அனைத்துமே, அமெரிக்கா சராந்த தமிழர் நிலைபாடு என்பதை போன்ற ஒரு அரசியல் கணக்கு தான். ஆனால், எப்போதும் போல் இப்போதும். சர்வதேசம் சார்ந்த ஒரு நிலைபாட்டை எடுத்துவிட்டு, மீண்டும் பிழை விட்டோம் என்று பின்னர் புலம்புவதற்கு முன்னர், பிரச்சினையை அனைத்து கோணங்களில் இருந்தும் அலசி பார்ப்பது தமிழர் தரப்பிற்கு அவசியமாகிறது. அவ்வாறு, எதிரியின் லாப – நஷ்ட கணக்கைப் போட்டு பார்க்காமலே, கூட்டமைப்பு இந்த முறையும் அமெரிக்காவைச் சார்ந்து அரசியல் செய்யும் முடிவை எடுத்துள்ளது என்றே எண்ணத் தோன்றுகிறது.

### சாதித்தது என்ன?

சரி, அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட அரசியல் தீர்வு முறைமையில் அமெரிக்கா இது வரை தமிழர் தரப்பிற்கு சாதித்ததுதான் என்ன? இலங்கை அரசியல் சார்ந்த விவகாரங்களில் அமெரிக்கா எந்த பிரச்சினைக்கு முன்னுரிமை அளிக்கிறது, அல்லது அளிக்கும்?

முதல் கேள்விக்கான விடை, மனித உரிமை கவுன்ஸில் முடிவுகளிலும் அதனைச் செயல்படுத்தும் முறையிலும் உள்ளது. ஐ.நா. முறைமையின் அடிப்படையில் அமெரிக்கா உள்ளிட்ட மேலை நாடுகளின் முன்னெடுப்புகள் நீண்டகால செயல் திட்டங்களுக்கு வழிவகுக்கும் என்று வேண்டுமானால் பேசிக்கொள்ளலாம். ஆனால், போர்க் குற்றங்கள் போன்ற குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கு உடனடி முடிவுகள் ஏதாவது கிடைக்கும் என்று தோன்றவில்லை.

அமெரிக்கா, ஆறு மாதங்களுக்கு ஒரு முறை, இலங்கையின் போர் கால இராணுவ தளபதிகளில் ஒருவர் தனது நாட்டிற்குள் காலடி வைக்கு கூடாது என்று அறிவிப்பதே தங்களது கோரிக்கைகளுக்கு கிடைத்த வெற்றியாக தமிழர் தரப்பு கருதி, அடுத்த கட்ட நடவடிக்கையை எதிர்பார்க்கிறது. அடுத்த ஆறு மாதங்கள் அல்லது ஒரு வருட காலத்தில், தமிழரின் பொறுமை மீண்டும் குறையும் போது, மீண்டும் அமெரிக்கா வேறொரு இராணுவத் தளபதிக்குத் தடை போடும்.

இன்று வரை, இனப்பிரச்சினை குறித்த அமெரிக்காவின் போக்கு 'குரைக்கிற நாய் கடிக்காது' என்ற நிலையிலேயே தொடர்கிறது. இது போதாது என்று கடந்த மனித உரிமை கவுன்ஸில் தீர்மானத்தின் படி, போர் குற்றங்களுக்கும் அப்பால் சென்று. நாட்டில் தற்காலத்தில் அரங்கேறும் மனித உரிமை மீறல்களையும் சர்வதேச விசாரணை வளையத்திற்குள் கொண்டுவரும் முயற்சிகளே முன்னிலை பெற்று வருகின்றன. இந்த நீர்த்துபோகும் நிகழ்வுகளால் தமிழர் தரப்பிற்கு கிடைக்கப் போவது என்ன?

இப்போது இரண்டாவது கேள்வி, அமெரிக்காவின் இலங்கை சார்ந்த பட்டியலில் முன்னிடம் பெறுவது எது? இனப்பிரச்சினையா அல்லது பெருகி வரும் சீனாவின் செல்வாக்கா?

சர்வதேச அரசியலில் பேச்சுவார்த்தைகள் அல்லது அரசியல் அழுத்தங்கள் மூலம் கிடைக்கும் வெற்றிக்கு வெற்றி பெற்ற கட்சியும் ஒரு விலை கொடுக்க வேண்டும்.

அமெரிக்காவைப் பொறுத்தவரை, சீனா வியத்தில் இலங்கை அரசைத் தன் வழிக்குக் கொண்டு வரும் முயற்சியில், இனப்பிரச்சினையை இலகுவாகக் கண்டுகொள்ளாமல் போகலாம். அல்லது பகடைகாயாகப் பயன்படுத்தலாம். ஆனால், இனப்பிரச்சினையில் தமிழர் தரப்பிற்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக, சீனா சார்ந்த வியங்களில் அரசின் போக்கைக் கண்டு கொள்ளாமல் இருக்கும் என்று யாரும் கருத மாட்டார்கள்.

இதில் எந்த ஒரு வழிமுறையையும் அமெரிக்கா முன்னெடுக்குமானால், உள்நாட்டு அரசியல் மற்றும் தேர்தல் கால அழுத்தங்கள் காரணமாக, அரசாளும் சிங்கள அரசியல் தலைமைகள், இனப்பிரச்சினைத் தீர்வு வியத்தில் மென்மேலும் கடும் போக்கையே எடுக்கும் என்பது நிச்சயம். அவர்களது கவலை அவர்களுக்கு. பேரினவாதிகளுக்கு அப்பால் சென்று, 1987 – 89 காலத்தை ஒட்டிய ஜே.வி.பி. கிளர்ச்சியைப் போன்றே மற்றொன்று உதித்து விடுமோ என்ற கவலை அவர்கள் அனைவருக்கும் எப்போதும் உண்டு.

இவற்றிற்கு அப்பால் சென்று, அமெரிக்கா உள்ளிட்ட மேலை நாடுகள், இனப்பிரச்சினைக்கு ஓர் இராணுவ ரீதியான தீர்வை கண்டறியும் என்று எந்தவொரு தமிழனும் கனவு கூட காண மாட்டான். அவ்வாறு கனவு காண்பவர்களுக்காக இது: இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் தொட்டு, அமெரிக்காவின் இராணுவ ரீதியிலான மனித உரிமை முன்னெடுப்புகளின் முடிவு, வியட்நாம், ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் போன்ற நாடுகளில் இன்றும் காட்சிப் பொருள். அத்தயை நிலை இலங்கைக்கு தேவையா? அதற்குத் தமிழர் தரப்பு பழியேற்க வேண்டுமா?



காலைக்கதிர் Kalaikkathir

# மலேரியா நோய் தொற்று யாழில் ஏற்படும் அபாயம்!

## மாகாண சுகாதாரப் பணிப்பாளர் எச்சரிக்கை



வெளிநாடுகளுக்குச் செல்ல ஒரு மாதத்திற்கு முன்பு, அதன் பின்னர் அந்த நாடுகளில் தங்கி இருக்கின்ற காலப்பகுதி, நாட்டுக்கு திரும்பிய பின்னர் என தொடர்ச்சியாக மலேரியா தடுப்பு மாத்திரைகளை பயன்படுத்த வேண்டும் என வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில் மேலும் கூறியவை வருமாறு -

வெளிநாட்டில் இருந்து ஒருவர் மலேரியா தொற்றுடன் இங்கே வந்தால் உள்ளூரிலே இந்த நோய் பரவக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன. இந்த சூழ்நிலையில் எவ்வாறு இந்த நோயைக் கட்டுப்படுத்தலாம் என்பது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம். குறிப்பாக மலேரியா உள்ள நாடுகளுக்குச் செல்வோர் இந்த விடயம் தொடர்பில் அவதானமாகச் செயற்பட வேண்டும்.

2012 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நான்கு வருடங்கள் மலேரியாத் தொற்றாளர்கள் இல்லாமல் தக்க வைத்துக் கொண்ட படியால் 2016 ஆம் ஆண்டு உலக சுகாதார ஸ்தாபனத்தால் இலங்கை மலேரியா அற்ற நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

இலங்கையைப் பொறுத்தவரை உலர் வலயப் பிரதேசங்களில் மலேரியா நோயைப் பரப்பக்கூடிய அனோபிலிஸ் காணப்படுகின்றது. தென்பகுதியைப் பொறுத்தவரை மலேரியா நோயை ஏற்படுத்தக்கூடிய நுளம்புகள் காணப்படவில்லை.

யாழ்ப்பாண நகரப் பகுதியில் அனோபிலிஸ் டிபென்சி எனும் மலேரியா அல்லது நகரப்புற மலேரியாவைப் பரப்பக் கூடிய ஒருவகை நுளம்பு யாழ்ப்பாண நகரப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமை எங்களுக்கு மிகவும் ஓர் அபாயகரமானது.

யாழ் நகரில் அடையாளம் காணப்பட்டுள்ள இந்த நுளம்பு மூலம் எமது பகுதியிலும் மலேரியா பரவக்கூடிய சாத்தியக்கூறு காணப்படுகிறது. மலேரியாவை பரப்பக் கூடிய நுளம்புகள் எங்களுடைய பிரதேசங்களில் தாராளமாக இருக்கின்றன.

பெரும்பாலான ஆபிரிக்க நாடுகள் இதைவிட இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மலேசியா, பிலிப்பைன்ஸ் போன்ற மலேரியா பரவல் உள்ள நாடுகளுக்குச் செல்பவர்கள் மிக அவதானமாக நடந்துகொள்ள வேண்டும்.

அங்கு சென்று திரும்பும் பொழுது எந்தவித அறிகுறியும் இன்றி மலேரியா நோய் தொற்று ஏற்படக்கூடிய அபாயம் உண்டு.

இது ஏற்படாமல் தடுக்க தடுப்பு மாத்திரைகள் காணப்படுகின்றன. அவற்றை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பெற்றுக்கொள்ளமுடியும்.

வெளிநாடுகளுக்குச் செல்ல ஒரு மாதத்துக்கு முன்பு, அதன் பின்னர் அந்த நாடுகளில் தங்கி இருக்கின்ற காலப்பகுதியில், நாட்டுக்கு திரும்பிய பின்னர் எனத் தொடர்ச்சியாக குளிகை பயன்படுத்த வேண்டும். இதைப் பின்பற்றினால் மலேரியாத் தொற்று ஏற்படாது. அதைமீறி மலேரியாத் தொற்று ஏற்பட்டாலும் நோய் தாக்கம் தீவிரமாக இருக்காது.

இவ்வாறான நாடுகளுக்குச் சென்று திரும்பி வந்த பின்னர் ஒரு வருட காலப்பகுதிக்கு போதனா வைத்தியசாலை, பொது வைத்தியசாலை, ஆதார வைத்தியசாலை போன்றனவற்றுக்கு சென்று மலேரியா பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும்.

மலேரியா நோய் என இனங்காணப்பட்டவர்கள் மூன்றுவருடகாலத்துக்கு இரத்ததானம் செய்யக்கூடாது. எனவே நுளம்புகள் பரவாது சுற்றுப்புறங்களை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். - என்றார்.

# எனது அரசியலை மழுங்கடிக்க முயற்சி

## எம்.எஸ்.தௌபீக் குற்றச்சாட்டு



திருகோணமலை மாவட்ட மக்களின் மருந்து தேவைகளை ஓரளவேனும் அரச ஒசுசல மூலம் நிவர்த்திக்க முடியும் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியாவில் முதலாவது அரச ஒசுசல மத்திய நிலையம் திறந்துவைக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில் அவர் கூறியவை வருமாறு -

திருகோணமலை மாவட்டத்தில் அரச ஒசுசல நிலையமொன்றை நான் திருகோணமலை மாவட்டத்தில் கொண்டு வரவேண்டும் என்று நினைத்த கனவு நினைவடைந்து விட்டது.

இன்று மக்கள் குறைந்த விலையில் மருந்துகளைக் கொள்வனவு செய்ய முடியும். இந்த மாவட்டத்தில் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தாலும் செயலில் காட்டுவதில்லை, மாறாக கதைகளிலே செயற்பாடுகளை வெளிக்காட்டுவார்கள். அவை மக்களுக்குத் தெரியும்.

எனக்கெதிராக பல்வேறு வகையான சூழ்ச்சிகளை செய்து வருகின்றார்கள். எனது அரசியலை மழுங்கடிப்பதற்காக. அது முடியாத காரியம் என்பதை நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

மிக நீண்டகாலமாக எமது திருகோணமலை மாவட்ட மக்கள் எதிர்பார்த்திருந்த அரச மருந்தக கூட்டுத்தாபணத்தின் ஒசுசல நான் எடுத்த முயற்சியின் பயனாக நிறுவியுள்ளேன்.

கிண்ணியா பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாக இந்த நிலையம் திறந்துவைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராத யஹம்பத், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான கபில அத்துக்கொரல, கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள ஆணையாளர் அஸ்மி எனப் பலர் கலந்து கொண்டனர்.

# எரிவாயு தட்டுப்பாடு விரைவில் நீங்கும்!

## லிற்றோ நிறுவனம் அறிவிப்பு

உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்கள் தொடர்பில் லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

உள்நாட்டு மற்றும் வணிக எரிவாயு சிலிண்டர்களின் உற்பத்தி மற்றும் விநியோகத்தை விரைவுப்படுத்த தற்போதைய நிலையில் உடனடி நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எல்பி எரிவாயு சிலிண்டர்களின் உற்பத்தித் திறனையும் அதிகரித்துள்ளன என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு நாளகளிலும் இன்றும் 2 லட்சத்து 20 ஆயிரம் உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன எனவும் அவை விரைவில் நுகர்வோருக்கு வழங்கப்படவுள்ளன எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாளாந்த எல்.ஜி எரிவாயு தேவையைப் பூர்த்தி செய்வதற்காக எதிர்வரும் தினங்களில் நாள் ஒன்றுக்கு 90 ஆயிரத்து - ஒரு லட்சம் வரை உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு வழங்குவதற்கு நிறுவனம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது என லிட்ரோ எரிவாயு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, சந்தையில் தற்போது நிலவும் எரிவாயு தட்டுப்பாடு குறுகிய காலத்தில் களையப்படும் என குறித்த நிறுவனம் நுகர்வோருக்கு அறிவித்துள்ளது.

# பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபர் உயிரை மாய்க்க முயற்சி!

பருத்தித்துறை பொலிஸ் நிலைய தடுப்பு காவலில், தடுத்து வைக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் தனது உயிரை மாய்க்க முயன்ற நிலையில் பொலிஸாரால் காப்பாற்றப்பட்டு , யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.



பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் புதன்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

அல்வாய் பகுதியை சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரே அவ்வாறு உயிரை மாய்க்க முயன்றுள்ளார்.

குறித்த நபர் தனது மனைவியை தாக்கினார் என அவரது மனைவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். அதன் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் குறித்த நபரைக் கைதுசெய்து , பொலிஸ் நிலையத் தடுப்புக் காவலில் தடுத்து வைத்திருந்தனர்.

அந்நிலையில் குறித்த நபர் தடுப்புக்காவலில், தனது சாரத்தைக் கழட்டி, அதன் மூலம் தூக்குப்போட்டு, தனது உயிரை மாய்க்க முயன்றுள்ளார்.

அதனைக் கண்ணுற்ற பொலிஸார் அவரை காப்பாற்றி மந்திகை வைத்திய சாலையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார்

# சபாநாயகருக்கு ரணில் கோரிக்கை



எதிர்வரும் 18ஆம் திகதி நாடாளுமன்றத்தின் புதிய அமர்வு ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் ஜனாதிபதியின் முக்கிய உரை மீதான ஒத்திவைப்பு வேளை விவாதம் நடத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் சபைத் தலைவர் தினேஷ் குணவர்தன ஆகியோருக்கு ரணில் விக்கிரமசிங்க கடிதம் மூலம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வுகளைக் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி நிறைவு செய்ய ஜனாதிபதி தீர்மானித்திருந்த நிலையில், நாடாளுமன்றத்தின் அடுத்த கூட்டத்தொடர் ஜனவரி 18 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் ஜனவரி 19, 20 அல்லது 21 ஆம் திகதிகளில் குறித்த விவாதத்தை நடத்துமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் சபைத் தலைவர் தினேஷ் குணவர்தன ஆகியோருக்கு ரணில் விக்கிரமசிங்க கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.01.2022இல் வெளியிடப்பெற்றது.

காலைக்கதிர் Kalaikkathir

## யாழ். போதனா வைத்தியசாலைக்கு

# சிகிச்சைக்காக வந்த பாட்டியின் மூன்று பவுண் நகை கொள்ளை

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற வந்த வயோதிபப் பெண்ணின் 3 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன என்று பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் குறித்த வயோதிபப் பெண் நேற்று சிகிச்சையின் நிமித்தம், 'எக்ஸ்ரே' எடுப்பதற்காகச் சென்றபோது, தான் அணிந்திருந்த தங்கச் சங்கிலி மற்றும் காப்பு ஆகியவற்றைக் கழற்றி தனது கைப்பையினுள் (ஹாண்ட் பாக்) வைத்துச் சென்றுள்ளார்.

திரும்பி வந்து கைப்பையைப் பார்த்த போது, அதனுள் இருந்த நகைகள் களவாடப்பட்டு இருந்தமையைக் கண்ணுற்று வைத்தியசாலை நிர்வாகத்திடம் முறையிட்டுள்ளார்.

நிர்வாகத்தின் அறிவுறுத்தலுக்கமைய வைத்தியசாலைப் பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்கு வருவோர் நகைகள் உள்ளிட்ட பெறுமதியான பொருள்களைக் கொண்டு வருவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு , வைத்தியசாலை நிர்வாகம் பல தடவைகள் எச்சரித்து வந்துள்ளது.

தினமும் வைத்தியசாலைக்குப் பெருமளவானோர் பல்வேறு பகுதிகளில் இருந்து வருவதால் சிகிச்சைக்கு வருவோர் தமது உடமைகளை தாமே பாதுகாத்துக்கொள்ள வேண்டிய தேவையுள்ளது. அதனால் பெறுமதியான உடமைகளுடன் வருவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு வைத்தியசாலை நிர்வாகம் கோரியுள்ளது.

# இலங்கையுடனான சீனாவின் உறவு இவ்வருடம் மேலும் பலப்படுத்தப்படும்

## சபாநாயகரிடம் தூதுவர் வாக்குறுதி

இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ சென்ஹொங், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

அத்துடன், சீன மக்கள் குடியரசின் தேசிய மக்கள் காங்கிரஸின் நிலைக் குழுவின் தலைவரின் (சீன நாடாளுமன்ற சபாநாயகர்) புத்தாண்டு வாழ்த்துச் செய்தியையும் சபாநாயகரிடம் கையளித்தார்.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் காணப்படும் இரு தரப்பு ஒத்துழைப்பை இவ்வருடத்தில் மேலும் பலப்படுத்துவதற்கு உறுதியுடன் இருப்பதாக சீனத் தூதுவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

வாழ்த்துச் செய்தியை அனுப்பிவைத்தமைக்காக சீன மக்கள் குடியரசின்



தேசிய மக்கள் காங்கிரஸின் நிலைக் குழுவின் தலைவருக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நன்றி தெரிவித்தார்.

இலங்கைக்குச் சீனா தொடர்ந்தும் வழங்கி வரும் ஒத்துழைப்புக்கு சபாநாயகர் இங்கு நன்றி பாராட்டினார்.

# பொருளாதாரப் படையணி; உருவாக்கியது சஜித் அணி



கொழும்பு, ஜன. 07

பொருளாதாரக் கொள்கைகள் கேந்திர நிலைமொன்றை பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நிறுவியுள்ளது.

பொருளாதாரத் துறையில் நிபுணத்துவம் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹர்ஷ டி சில்வா, கபீர் ஹாசீம் மற்றும் எரான் விக்கிரமரத்ன ஆகியோரின் கண்காணிப்பின் கீழ் குறித்த கேந்திர நிலையம் இயங்கவுள்ளது.

நாடு கடும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துள்ள நிலையில், நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை இந்தக்குழு முன் வைக்கவுள்ளது.

# காஸ் வெடிப்பு சம்பவங்களால் பாதிக்கப்பட்டோருக்கு காப்பீடு

கொழும்பு, ஜன. 07

எரிவாயு வெடிப்புச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்கள் காப்புறுதியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் தெசார ஜயசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அனைத்துலிட்ரோஎரிவாயுபாவனையாளர்களுக்கும் ஒரு மில்லியன் ரூபா வரையான காப்புறுதியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

பாதிக்கப்பட்டவர்கள் 1311 என்ற இலக்கத்துக்கு அழைப்பதன் மூலம் இந்தக் காப்புறதியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் காப்புறுதித் திட்டத்தின் மூலம் இதுவரையில் மிகவும் குறைந்த எண்ணிக்கையானவர்களே விண்ணப்பித்துப் பயன் பெற்றிருக்கின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தூக்கில் தொங்கிய நிலையில் இராணுவச் சிப்பாயின் சடலம்!

முல்லைத்தீவு, ஜன. 07

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்றுமுன்தின் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

திருமுறுகண்டி, ஏ - 9 வீதி பகுதியில் அமைந்துள்ள 11 ஆவது இயந்திர காலால் படைப்பிரிவின் பணியாற்றும் இராணுவச் சிப்பாயே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இராணுவப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சடலம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப் படவுள்ளது.


Vocational Study in GERMANY

தொழிற்கல்வி கற்பதற்குச் சிறந்த நாடுகளில் ஒன்றான ஜேர்மனியில் உங்கள் கனவுகளை நனவாக்கிட....

* 3 வருட காலப் பயிற்சிநெறி
* 100ற்கும் அதிகமான பயிற்சிநெறிகள்
* பிரசித்திபெற்ற நிறுவனங்களில் தொழிற்பயிற்சி
* பயிற்சிநெறியின் போதே மாதாந்த வருமானம்
* பயிற்சியின் முடிவில் ஐரோப்பாவில் நிரந்தர வதிவிடத்திற்கு விண்ணப்பிக்க முடியும்.

தகைமைகள் -

* 18 - 25 வயதிற்குட்பட்டவர்கள்
* உயர்தரம் - 3C பெறுபேறுகள்
* சா/த- 2 மொழிகள், கணிதம், விஞ்ஞானம் அடங்கலாக 6 பா[illegible]ில் 5C பெறுபேறுகள்



IIS STUDY ABROAD

441, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (பெருமாள் கோயில் அருகாமையில்)

071 777 4666
021 222 8060